Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389

National Tamil Daily தேசிய தினசரி

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது தை 23 ஆம் நாள் றம்ழான் பிறை 9 (5-2-63) செவ்வாய்க்கிழமை தபாற் பெட்டி என் 49 355

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணடி விற்பனையாளரும்
45, மெயின்வீதி, : யாழ்ப்பாணம்

## பஸ் ஊழியர் வேலைநிறுத்தம் முடிவடைந்தது?

கொழும்பு, செவ்வாய்

இலங்கை போக்கு வரத்து சபையில் லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவற்றின் சார்பாக வேலை நிறுத்தம் செய்த அகில இலங்கை ஐக்கிய மோட்டார் ஊழியர் சங்கமும், இலங்கை மோட்டார் ஊழியர் சங்கமும் இன்று காலை முதல் வேலைக்குத் திரும்புமாறு தங்கள் ஊழியர்களைக் கேட்டுக்கொண்டுள்ளதாக அறிவிக்கப் பட்டது. இதைத்தொடர்ந்து கடந்த சில தினங்களாக நடைபெற்று வந்த பஸ் ஊழியர் வேலை நிறுத்தம் முடிவுக்கு வருகிறது. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்களில் பெரும் பாலோர் மேற்கண்ட இரு யூனியன்களையும் சேர்ந்தவர்களாகும்.

# சீக்கிரத்தில் தமிழரசு கட்சிக்கு அழைப்பு?

## தேசியரீதியில் பிரச்னைகளை தீர்க்க பிரதமர் முயல்வார்

## 'குளுகோஸ் வீரர்' மனமாற்றம்

(நமது அரசியல் நிருபர்)

பிரதமர்சிறிமாவோபண்டார நாயக்கா சீக்கிரத்தில் தமிழரசுக்கட்சித் தலைவர்களை அழைத்து பல தேசிய பிரச்னைகளைத் தீர்க்க அக்கட்சியின் உதவியையும் நாடுவாரென்று விஷயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் வந்திருந்த தமிழரசுக் கட்சித் தலைவரும் பட்டிருப்பு எம். பி. யுமான திரு. எஸ். எம். ராசமாணிக்கத்தை இவ்விஷயமாகக் கேட்டதற்கு இதுவரை எவ்வித அழைப்பும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்றார். ஆனல் சென்றவாரம் திரு. எப். ஆர். ஜயசூரியா (குளுகோஸ் புகழ்) ஒரு கூட்டத்தில் பட்டிருப்பு எம்.பி.யை ஆவலுடன்அணுகி "எவ்வளவு காலம் நாம் இப்படிசசண்டை போட்டுக்கொண்டிருப்பது? நாம் சமரசமாக ஒரு முடிவு செய்துகொள்ள வேண்டிய சமயம் வந்துவிட்டது. சீக்கிரத்தில் ஒரு பெரிய சந்தர்ப்பம் தங்களுக்குக் காத்திருக்கிறது. தயவுசெய்து அதை நழுவவிட்டுவிடவேண்டாம்" என்று ஒருவித மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டதாகத் தெரிகிறது.

அரசாங்கக் கட்சியிலே திரு எப். ஆர். ஜயசூரியாவுக்கு எவ்வளவு தூரம் செல்வாக்குண்டோ தெரியவில்லை. என்றாலும் தீவிர வகுப்புவெறியரான ஒருவரே இப்படி மனம் மாறிப் பேசுவதால் அரசாங்கக் கட்சியிலும் பலர் இவ் விஷயமாக மனம் மாறிவருகின்றனரென்று கொள்ளுவது தவருகது.

பல பிரச்னைகளும் தேசிய ரீதியில் தீர்க்கப்படவேண்டுமென்றும் பல கட்சியினரும் இதற்காக உதவ முன்வருவரென்று உறுதியாக நம்புவதாகவும் பிரதமர் சுதந்திர தின அறிக்கையில் தெரிவித்ததைத் தொடர்ந்து இதுபற்றி பல கட்சித் தலைவர்களையும் சீக்கிரத்தில் அழைத்துப் பேசுவாரென்று அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

## கறுப்புக் கொடியை பொலிசார் அகற்றினர்

### மேயர் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

'நாட்டில் அமைதியையும், நீதியையும் நிலைநாட்ட வேண்டிய பொலிஸ்காரர்கள் நீதியற்ற முறையில் நடந்துகொள்வது விரும்பத்தக்கதல்ல. இத்தகைய செயல்களினுல் நாட்டில் நீதி சரியாக இயங்கமுடியாது. பொலிஸாரின் இச் செயல் தமிழ் மக்களின் மனத்தைப் பெரிதும் புண்படுத்துவதாகும்.' என்று யாழ்ப்பாணம் மேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாநகர சபையில் பறக்கவிடப்பட்ட கறுப்புக்கொடி காலையில் இரு பொலிஸ்காரர்களால் அகற்றப்பட்டது. இரு பொலிஸ்காரர்கள் நேற்றுக் காலை 7 மணியளவில் மாநகரசபைக்கு வந்து கறுப்புக் கொடியை கீழே இறக்கப்போவதாக அங்கு கடமையாற்றிக்கொண்டிருந்த காவலாளியிடம் தெரிவித்தனரென்றும் காவலாளி கொடியை இறக்க மேயர் வீட் வேண்டாம் என்று கூறவே பொலிஸார் சட்டத்தைக் கடைப்பிடிக்கப்போவதாகக் கூறினர்கள் என்றும், இதனல் காவலாளி அருகிலிருந்த வாடிவீட்டுக்குச் சென்று மேயருக்கு டெலிபோன் செய்யப் போனதும் கொடியை அவர்கள் இருவரும் இறக்கிக் கொண்டு போய்விட்டனர் என்றும் தெரிகிறது. இத்தகவல் மேயருக்குத் தெரிவிக்கப்பட்டதும் மேயர் மாநகரசபைக்கு வந்து வேறொரு கொடியைப் பறக்கவிட்டார்.

தமிழரசுக் கட்சித் தலைமைக் காரியாலயத்திலும், வேறுபல இடங்களிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டுள்ளன. தமிழரசுவாலிப முன்னணிச் செயலாளர்களில் ஒருவரான திரு. சீவரத்தினம் யாழ்ப்பாணம் காங்கா சத்திரத்திலிருந்து கொடி அகற்றப்பட்டதை ஆட்சேபித்து பொலிஸில்

(5-ம் பககம் பார்கக)

## அனுராதபுரத்தில் சுதந்திரதின கொண்டாட்டம்

(நமது நிருபர்)

அநுராதபுரம், திங்கள்

இலங்கையின் பதினைவது சுதந்திரதினம் இன்றுநாட்டின் பலபாகங்களிலும் கொண்டாடப் பெற்றது. ஆலயங்கள், தேவாலயங்களில் மணியோசை ஒலிக்க பூஜை, பிரார்த்தனைகளுடன் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகின.

புராதன தலைநகரான அநுராதபுரத்தில் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் உத்தியோக பூர்வமாக நடைபெற்றன.

காலையில் அநுராதபுரம் ஸ்ரீமகாபோதியில் நடைபெற்ற விசேஷ மதச்சடங்குவைபவத்தில் கவர்னர் ஜெனரல் திரு வில்லியம்கோபல்லவா, பிரதமர் திருமதி சிறிமா பண்டார நாயக்கா, மற்றும் மந்திரிகள், பிரமுகர்களும் கலந்துகொண்டனர். முற்பகல்பத்தரைமணிக்கு ருவான்கவலிசிய மண்டபத்தில் நடைபெற்ற பௌத்தபூசையில் பிரதமர், கவர்னர் ஜெனரல் கலந்துகொண்டனர்.

நண்பகல் 12 மணிக்கு கொழும்பில் கடற்படையினரும் அநுராதபுரத்தில் ராணுவத்தினரும் 21பீரங்கிவேட்டுக்களைத் தீர்த்தனர். இதன்பின் பிரதமர் சிறிமா நாட்டுமக்களுக்கு தனது சுதந்திரதினச் செய்தியை விடுத்தார்.

## யாழ்ப்பாணம் புதிய மின்சார என்ஜினியர்

கொழும்பு, திங்கள்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மின்சார என்ஜினியராக திரு. ஜி. எல். ஜயவர்த்தனை ஸ்தலஸ்தாபன சேவைக்கமிஷன் நியமித்திருக்கிறது. இன்று முதல் பதவிப் பொறுப் பேற்கும் அவர், ... னபு அநுராதபுரம் மின்சார என்ஜினியராகக் கடமையாற்றினர்.

## திருமலையில் துக்கதினம்; எங்கும் கறுப்புக்கொடி

திருக்கோணமலை, திங்கள்

சுதந்திர தினத்தை துக்க தினமாக அனுஷ்டிக்கவேண்டுமென்றும் கடைகளை அடைத்துகறுப்புக்கொடிகளைப் பறக்கவிட வேண்டுமென்றும் தமிழரசுக் கட்சி விடுத்த வேண்டுகோளுக்கிணங்க இன்று திருக்கோணமலையில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. கடைகள் மூடப்பட்டிருந்தன. நகர சபைக் கட்டிடங்களிலும் மற்றும் கடைகள் வீடுகளிலும் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டன. மூதூர், நிலாவெளி, சாம்பல்தீவு ஆகிய இடங்களிலும் கறுப்புக்கொடிகள் பறநதுகொண்டிருந்தன ஆலயங்கள் பலவற்றில் பிரார்த்தனைகள் நடைபெற்றன.

## கொழும்பு நாடுகள் மீண்டும் முயற்சி

கெய்ரோ, பெப். 4

கொழும்பு யோசனை மீது சீனவின் தற்போதைய மனப்போக்கைத்தொடர்ந்து, அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி 6 கொழும்பு நாடுகள் மீண்டும் ஆலோசனை தொடங்கியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இலங்கைப் பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயகா, ஐக்கிய அராபியக் குடியரசுப் பிரதமர் திரு. அலிசாப்ரிக்கு எழுதிய கடிதம் ஒன்றில் புதிய நடவடிக்கை பற்றி அறிவித்திருப்பதாகவும், இவ்விஷயமாக ஐ. அ. குடியரசு, கானவுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகிறது.

# "சீனா பின்வாங்கியதுபோல் தமிழ்ப் பாதுகாப்பு சட்டமும் கொண்டுவரப்பட்டது!"

## வாலிப முன்னணி தொழிலாளர் மகாநாட்டில் பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

"தமிழ்மொழி பாதுகாப்புச் சட்டத்தை அரசாங்கம் அவசர அவசரமாகக் கொண்டு வந்தது ஏன்? பிரிவினை ஏற்பட்டுவிடும் என்ற அச்சமும், தமிழுக்கு அந்தஸ்து கொடுத்திருப்பதாக உலக நாடுகளுக்குக் காட்டுவதுமே காரணம்!" என்று திரு எஸ். வன்னியசிங்கம் தமிழரசு வாலிப முன்னணி தொழிலாளர் மகாநாட்டில் பேசுகையில் கூறினார்.

வாலிபமுன்னணித் தலைவர் அட்வகேட் சி. கதிரவேலுவின் தாயார் காலமானதையிட்டு கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் இரண்டு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

தொழிலாளர் மகாநாட்டுக்குத் தலைமை தாங்கிய திரு. சிவரத்தினம் கூறியதாவது:-

இன்று எமது இலங்கை நாடானது வகுப்புவாதம், இனக் கலவரம், மதத்துவேஷம் போன்ற ஓர் அழிவின் பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

மக்கள் அரசாங்கம் சோஷலிஸ அரசாங்கமென்று சிங்களரிடையே கூறி வாக்குரிமை பெற்று ஆட்சிபீடத்திலேறி இன்று பாட்டாளி மக்களையும் தொழிலாளர்களையும் வாட்டி வதைக்கிறது இன்றைய அரசாங்கம். தமிழ்ப் பேசும் மக்களின் மொழி உரிமைக்காக குடியுரிமைக்காக, பிரதேச உரிமைக்காக நடத்தப் படவிருக்கும் போராட்டத்தில் எந்த விதமான தன்மையை எம்மிடம் அரசாங்கம் பாவிக்கிறதோ அதே ரீதியில் நாமும் பதில் தரவேண்டும். தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்கு எத்தகைய சட்ட விரோத செயல்களை செய்வதற்கும் வாலிபமுன்னணி பின்னிற்கமாட்டாது என்பதை அரசாங்கத்திற்கு திட்டவட்டமாகத் தெரிவிக்கிறோம்

திரு. எஸ். வன்னியசிங்கம் பேசுகையில் தெற்கிலங்கையிலுள்ள தமிழர்களும் மலைநாட்டுத் தமிழர்களும் வடகிழக்கு மாகாணங்களுக்கு வந்து கமத்தொழிலையும், கைத்தொழிலையும், வியாபாரத்தையும் அபிவிருத்தி செய்தாலேயொழிய நமது கிளர்ச்சி வெற்றியடையாது என்று கூறினார்.

### தோல்வியடைந்த காரணம்

இதுவரை காலமும் தமிழர்களின் போராட்டங்கள் தோல்வியடைந்த காரணத்தையும் இனிமேல் வெற்றியடையச் செய்யவேண்டிய வழிவகைகளையும் விளக்கி திரு. வன்னியசிங்கம் கூறியதாவது:-

"பொருளாதாரத்துறைவிஷயமும், அரசியல் துறை விஷயமும் ஒன்றோடு ஒன்று பிணைந்துள்ளன. தமிழ் இனத்தை பொறுத்த வரையில் பொருளாதார நிலையை முன்னேறச் செய்து வருங்கால சந்ததிக்கு உதவிசெய்யவேண்டும்.

ஒரு இயக்கத்தில் வாலிபர்கள்தான் முக்கியமானவர்கள். போராட்ட காலங்களில் வாலிபர்களின் பணி முக்கியமானது. காலத்திற்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு மாற்றம் செய்யவேண்டியதும் வாலிபர்களின் பொறுப்பு.

### 40 வருட போராட்டம்

கடந்த 40 ஆண்டுகளாக தமிழ் மக்களின் போராட்டம் நடந்துவருகிறது. 1919 ம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரஸில் சேர் பி. இராமநாதன் இருந்தபோது, தமிழ் மக்களின் போராட்டம் ஆரம்பமானது. தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு சேர் பி. இராமநாதன் தலைமையில் வாதாடினார்கள். அதன்பின் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் தமிழ்க் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டு, சோல்பரி விசாரணைக் குழுவின் முன்பு தீவிரமான கோரிக்கைகளை முன்வைதிதோம். அதன்பின் 48ம் ஆண்டுமுதல் தமிழ் மக்கள் சமஷ்டி ஆட்சிக்காகப் போராடிவருகிறார்கள்.

இந்த 40 வருடங்களாக நமது போராட்டங்களும் கிளர்ச்சிகளும், கோரிக்கைகளும் தோல்வியடைந்து வந்துள்ளன. 40 ஆண்டுகளாக காலத்திற்குக் காலம் தலைவர்களின் கோரிக்கைகள் வெவ்வேறாகக் காணப்பட்டாலும் அடிப்படைக் குறிக்கோள் ஒன்றுதான்.

சேர் பொன். அருணாசலம் கொழும்பிலுள்ள தமிழ் மக்களுக்கு தனித்தொகுதி வேண்டுமென்று வாதாடினார். சிங்களவர்கள் இதை ஒருமுகமாக எதிர்த்தார்கள். சேர். பி. இராமநாதன் 2 சிங்களப் பிரதிநிதிகளுக்கு 1 தமிழ்ப் பிரதிநிதி வேண்டுமென்று வாதாடினார். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஐம்பதிற்கு ஐம்பது கோரி வாதாடினார். தமிழரசுக் கட்சி கடந்த 14 ஆண்டுகளாக சமஷ்டி அரசியல் வேண்டுமெனப் போராடி வருகிறது.

### நிலைமையை மாற்றவேண்டும்

இலங்கைத் தீவு அரசியல் வட்டத்தில் தமிழ் இனம் தனி இனமாக வாழவேண்டும். அப்படி வாழ்வதற்கு தமிழ் மக்களிடம் ஒற்றுமையில்லையென்று சிலர் கூறுகிறார்கள்.

இந்திய தேசிய போராட்டத்தில்42ம் ஆண்டு, மஹாத்மா காந்தி சிறையிலே உண்ணாவிரதமிருந்தபோது ஒன்றன்பின் ஒன்றாக பலர் தங்கள் பதவிகளை ராஜினாமாச் செய்தார்கள். இதனால் அங்கே ஒற்றுமை கூடிக்கொண்டே போனது.

ஆனால் இலங்கையில், தமிழ் மக்களின் நிலை அப்படியல்ல. 1956-ம்ஆண்டு நான் அரசாங்க சேவையில் இருந்தபோதும் திருமலை மகாநாட்டிற்கு சென்றிருந்தேன். அம்மகாநாட்டிலும், மட்டக்களப்பு மகாநாட்டிலும் இருந்த ஆர்வமும் உற்சாகமும் மன்னார் மகாநாட்டில் காணப்படவில்லை. காரணம் என்ன? இந்த நிலைமையை மாற்றித் திருத்தி முன்னேற முடியும்.

நாலு ஐந்து குறிக்கோள் உள்ள இயக்கம் இலகுவில் வெற்றியின் பாதையில் முன்னேறாது. ஒரே ஒரு குறிக்கோள் உள்ள இயக்கம் இலகுவில் வெற்றியடைய முடியும். சிங்கள இனம் செய்யும் கொடுமைகளை, அட்டூழியங்களை, பொது அரங்கில் இலகுவில் சமாளிக்க முடியும்.

வட,கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப் படவேண்டுமென்பது எங்களின் கோரிக்கைகளில் ஒன்றாகும். சிங்கள மக்கள் இந்தக் கோரிக்கையைப் பிழையெனக் கூறுகிறார்கள். பல காலமாகத் தமிழர்கள் உயர்ந்த தராதரத்தில் இருந்து வருகிறார்கள். தாழ்ந்த நிலையிலுள்ள சிங்கள மக்களை, உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர அரசாங்கம் முயலுகிறது.

உறுதிகள், பெட்டிசம், அரசாங்க விண்ணப்பம் ஆகியன தமிழில் வெளியிட அரசாங்கம் மொழியுரிமை அளித்துள்ளது. ஆனால் அரசியல் அலுவலகங்களில் ஒரு மொழியில் செயலாற்றுகிறார்கள்.

### பிரதேச உரிமையும் மொழியும்

இலங்கையின் அரசியல் வட்டத்தில் சிங்கள மக்கள் 70 சதவீதம் இருக்கிறார்கள். அதனால் சிங்கள மொழி அரசாங்க மொழியாக இருப்பதற்குத் தடையில்லை. ஆனால் தமிழ் மக்களுக்கெனவும் ஒரு அரசாங்கமிருந்தால், தமிழ் அரசாங்க மொழியாக இருக்கும். பிரதேச சபை ஏற்பட்டால் தமிழ் அரசாங்க மொழியாகும் சந்தர்ப்பம் ஏற்படும். மத்திய அரசாங்கத்தில் சிங்கள மொழிதான் அரசாங்க மொழியாக இருக்கும். இருந்தாலும், தமிழ் அரசாங்கத்தில் தமிழ் அரசாங்க மொழியாக இருக்கும்.

சுதந்திரமடைந்த நாடுகளில் அரசாங்கம், பொதுமக்களின் வாழ்க்கையில் தலையிடத் தொடங்கியுள்ளது. 2-வது உலக யுத்தத்தின்முன், நாங்கள் விருப்பம்போல் அரிசி வாங்கலாம், விற்கலாம், அயல் நாடுகளுக்கு கஷ்டமின்றிப் பிரயாணம் செய்யலாம். ஆனால் இப்போது முடியாத காரியம்.

### சுதந்திர ஈழம்

எங்களின் குறிக்கோள் சமஷ்டியாக இருந்தாலும், கடந்த 14 வருடங்களாக தமிழ்ப் பிரதேசங்களுக்கு ஒரு சிறப்புப் பெயர் சூட்டியதாகத் தெரியவில்லை. இந்தியா ஒரு சமஷ்டி நாடுதான். ஆனால் அங்கே ஆந்திரா, கேரளம், தமிழ் நாடு என்று பெயர்கள் வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் இங்கு உள்ள தமிழ் மாகாணங்களுக்கு 'சுதந்திர ஈழம்' என்று பெயர் சூட்டவேண்டும். சுதந்திர ஈழம் என்ற குறிக்கோளில் இயங்கினாலொழிய விமோசனமில்லை.

தென்னிலங்கையிலே உத்தியோகம் [illegible]யாபாரம் செய்யும் தமிழ் ம[illegible]ள், வட, கிழக்கு மாகா[illegible]ணங்கக்கு தங்கள் தொழில்களை உதறிவிட்டு வரவேணடும். இத்தியாகத்தைத் தமிழ மக்கள் செய்யத் தயாராயில்லாவிட்டால், கிளர்ச்சியாலும், போராட்டத்தாலும் எதுவித பயனுமில்லை.

தமிழர்களுககுப்பழைய சரித்திரம் ஞாபகமில்லை. தமிழ் அரசர்களின் பெயர் கூடத் தெரியாது. உணர்ச்சி வசப்பட்டு உரத்த குரலிலே மணிக்கணக்காகப் பேசலாம். சூழ்நிலைக்கேற்ப கோஷங்களை எழுப்பலாம். அதனால் பயனென்ன? சிங்கள மக்களுக்கு பழைய சரித்திரம் தெரியும்.

சிங்களவரிடம் படைப்பலம், அதிகாரம் இருப்பதாகவும், 'சுதந்திர ஈழப்' போராட்டம் நடத்தினால், எங்களை அடக்கி விடுவார்கள் என்று சிலர் கூறலாம்.

### சீனவும் இலங்கையும்

இந்திய-சீனச் சண்டையில் சீன அநேக இந்தியரைக் கைது செய்தது. ஆனால் இந்தியா சீனரைக் கைது செய்யவில்லை. அப்படியிருந்தும் சீன பின்வாங்கியது. ஏன் தெரியுமா? உலக நாடுகளுக்கு தாங்கள் குற்றவாளிகள் அல்ல, இது எல்லைச் சண்டையென்பதைக் காட்டுவதற்காகத்தான் பின்வாங்கினார்கள்.

58-ம் ஆண்டு நடந்த கலவரத்தின்போது அரசாங்கம் அவசரம் அவசரமாக தமிழ் மொழி பாதுகாப்புச்சட்டத்தை நிறைவேற்றியது. காரணம் பிரிவினை ஏற்பட்டுவிடும் என்ற பயத்தினாலும், தமிழுக்கு அந்தஸ்து கொடுத்திருப்பதாக உலகநாடுகளுக்கு காட்டுவதற்காகவும் தான் பின்வாங்கினார்கள்.

ஐக்கிய நாட்டிலுள்ள 108 நாடுகளில் 40 நாடுகள் ஈழத்திலும் சிறியது. ஆபிரிக்காவில் எத்தனையோ நாடுகள் சுதந்திரமடைந்துவருகின்றன. நாம் மட்டும் சுதந்திரமாக வாழமுடியாதா?

---

### தேவை

யாழ். வர்த்தக ஊழியர் சங்கத்துக்கு லிகிதர் தேவை. நாளொன்றுக்கு 4மணி நேர வேலை. சம்பளம் ரூபா 35/-ம் கமிஷனும். ரொக்கப் பிணை ரூபா 250/-. கீழ்க்கூறிய விலாசத்துக்கு உடன் விண்ணப்பிக்கவும்.

சீ. பத்மநாதன்,
6-வது ஒழுங்கை,பலாலி வீதி,
690 யாழ்ப்பாணம்.

---


### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.
வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


# செய்தித்திரட்டு

### உதவிதேவை

திருமலை, திங்கள்

ஓர் மாணவன் கல்வியில் முன்னேற வேண்டுமானால், அவனுக்கு ஆசிரியர்களும் பெற்றோரும் உதவியளித்தல் அவசியமாகும் என்று முள்ளிப்பொத்தானை பாடசாலை பெற்றார்-ஆசிரிய சங்கக்கூட்டத்தில் தலைமையாசிரியர் ஜனாப் செயினுலாப்தீன் பேசுகையில் கூறினார். கூட்டத்தில் புதுவருட உத்தியோகஸ்தர்கள் தெரிவும் நடைபெற்றது.

∴ ∴ ∴

### பொதுநலம்

புங்குடுதீவு, திங்கள்

கல்வி கற்பிக்கும்பொழுது, சொந்தக் கோபங்களுக்கும் சுயநலத்துக்கும் இடமளித்தல் கூடாது. மாணவனை நல்ல முறையில் வாழவழிவகுப்பது ஆசிரியரின் கையில்தானுண்டு என்று புங்குடுதீவு மகாவித்தியாலய அதிபர் தமக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரத்தில் பேசுகையில் கூறினார். அதிபர் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

### பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

மராமத்து இலாகாவில் கடமையாற்றிய திரு. வே. தம்பிப்பிள்ளை இடமாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரின் சேவையைப் பாராட்டுமுகமாக நாளை புதன் கிழமை ஒருபிரிவுபசார வைபவம் நடைபெறும்.

∴ ∴ ∴

### அஞ்சலி

சங்கானை, திங்கள்

சங்கானை தொட்டிலடி சனசமூகசேவாசங்கம், தனது வாசிகசாலை மண்டபத்தில் மகாத்மாகாந்தியின் சிரார்த்த தினத்தைக் கொண்டாடியது. வீரத்துறவி விவேகானந்தர், சுபாஸ்சந்திரபோஸ் ஆகியவர்களின் ஜெனன நினைவையும் சங்கம் கொண்டாடியதுடன், லெனின், ஜீவானந்தம் ஆகியோரின் நினைவு குறித்தும் இருநிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

∴ ∴ ∴

### தேவை

காலி, திங்கள்

அண்மையில் நடைபெற்ற காலி மாவட்ட இணைப்புக் கமிட்டிக் கூட்டத்தில் காலியில் ஓர் குழந்தைகள் ஆஸ்பத்திரியை நிறுவித்தரும்படி அரசாங்கத்தைக் கேட்பதென்று ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது. காலி அரசாங்க அதிபர் திரு. ஏ. எல். நவரத்தினராஜா கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

∴ ∴ ∴

### முதற்தடவை

கொழும்பு, திங்கள்

அண்மையில் நடைபெற்ற விசேஷ கூட்டத்தில், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. ரஞ்சித் குணவர்த்தன, வெலிகம நகரசபையின் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். இடதுசாரி அங்கத்தவர் ஒருவர் உபதலைவராகத் தெரிவு செய்யப்பட்டது, வெலிகம நகரசபை சரித்திரத்திரத்தில் இதுவே முதற் தடவை.

∴ ∴ ∴

### வறுமையினால்....

பாணந்துறை,திங்கள்

நான்கு குழந்தைகளுக்குத் தந்தையான 45 வயதுள்ள ஜி. அலோசியஸ் என்பவர், வறுமை காரணமாக நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். மொறட்டுவ 'வெலோனா' வேலைத்தளத்தில் இவர் கடமையாற்றினார்.

∴ ∴ ∴

### தைப்பூசம்

கொழும்பு, திங்கள்

கொட்டாஞ்சேனை ஸ்ரீமுத்து மாரிஅம்மன் கோவிலில் நடைபெறும் வருடாந்த தைப்பூச விழா, இன்று ஆரம்பமானது. தைப்பூசவிழா வெள்ளிக் கிழமைவரை நடைபெறும்.

∴ ∴ ∴

### ஓவர்டைம் சம்பளம்

அம்பலாங்கொடை, திங்கள்

இங்குள்ள பாடசாலைகளில் சனிக்கிழமைகளில் பிற்பகல் வகுப்புக்களில் போதிக்கும் ஆசிரியர்கள் கல்வி இலாகாவிடம் 'ஓவர்டைம்' சம்பளம் கேட்பது சம்பந்தமாக இப்பொழுது ஆராய்ந்து வருகின்றனர். சனிக்கிழமைகளில் பிற்பகல் 1 மணிக்குப்பின்னர் போதிக்கும் ஆசிரியர்களே 'ஓவர்டைம்' சம்பளம் கேட்கவிருக்கிறார்கள்.

∴ ∴ ∴

### பரிதாபமரணம்

கிரியெல்ல, திங்கள்

கிரியல்ல என்றஇடத்தைச் சேர்ந்த நான்கு வயதுள்ள காந்தி முனசிங்கிபுர என்ற சிறுமி எரிகாயங்களினால் மரணமானார். சிறுமி அணிந்திருந்த சட்டையில் திடீரென நெருப்பு பிடித்ததினால் அவருக்கு எரிகாயங்கள் ஏற்பட்டன.

∴ ∴ ∴

### கங்கையில் பிரேதம்

அகலவத்தை, திங்கள்

அம்பிகொட என்ற இடத்திலுள்ள கங்கையில் தலையில்லாத ஒருவரின் பிரேதம் மிதக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அம்பிகொட கிராமத்தைச் சேர்ந்த ஒருஏழை ஓவியரான டபிள்யு. என். சிறில் என்பவரின் பிரேதம்தான் அதுஎன்று பின்னர் தெரிவிக்கப்பட்டது.

# நேபாவிலிருந்து சீனர் முற்றாக வெளியேறினர்

## ரஷ்யாவுடன் இந்தியா நீண்டகால வர்த்தக ஒப்பந்தம்

### தவாங்கில் சிவில் நிர்வாகம்

புதுடில்லி, பெப்ரவரி 4

வடகிழக்கு எல்லைப்பகுதியில், தாக்ளா மலைப்பகுதியிலிருந்தும் சீனர்கள் முற்றாக வெளியேறிச் சென்றுவிட்டனரென்று நேபா சிவில் நிர்வாக விசேஷ கமிஷனர் தெரிவித்தார். இந்தியா, திபெத், பூட்டான் ஆகிய எல்லைகளின் தாக்ளா சந்திப்பில் ஜனவரி இருபதாந் திகதிக்குப் பின் சீனர் காணப்படவில்லையென்று கமிஷனர் தெரிவித்தார்.

### தவாங்கில் சிவில் நிர்வாகம்

வட கிழக்கு எல்லையில் முக்கிய பௌத்த நகரமான தவாங்கில் மூன்றுமாத காலம் சீனர் தங்கியிருந்துவிட்டு சமீபத்தில் வெளியேறிய பின் இந்திய சிவில் நிர்வாகம் மீண்டும் அங்கு செயல்பட ஆரம்பித்துள்ளது. சென்ற வருடம் ஒக்டோபர் மாதம் 20-ந் திகதி நேபாவில் சண்டை ஆரம்பித்த நான்காவது நாள் தவாங் நகரம் சீனர் வசமானது. தவாங்கில் இப்பொழுது சுமார் பன்னிரண்டு பௌத்த லாமாக்கள்தான் உள்ளனர், சீனர் தவாங்கைக் கைப்பற்றுவதற்கு முன் அங்கிருந்து வெளியேறிய சுமார் 500 பேர் இன்னமும் இந்தியாவில் அகதிகளாகவே உள்ளனர்.

### ராணுவ உதவிப் பிரிவு

இந்தியாவுக்கு ராணுவ உதவி அளிப்பது சம்பந்தமான ஒரு பிரிவு புதுடில்லியிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் காரியாலயத்தில் அமெரிக்க ராணுவத்தைச்சேர்ந்த பிரிகேடியர் ஜெனரல் ஜோன் ஈ கெல்லி தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இதர உதவிப் பிரிவுகளைப் போலவே இதுவும் அமெரிக்க ஸ்தானிகர் கல்பிரய்த்தின் பொதுவான மேற்பார்வையின்கீழ் இருக்கும். இந்தியாவுக்கு ராணுவ உதவி அளிப்பது சம்பந்தமாக இந்தப் பிரிவு இந்திய அரசாங்கத்துடன் அலுவல்புரியும். இந்திய பாதுகாப்பு சாதன உற்பத்தி சம்பந்தமான பிரச்னைகளை ஆராய்வதற்காக பன்னிரண்டு அமெரிக்க படைசாதன உற்பத்தி நிபுணர்களின் குழுவொன்றும் புதுடில்லி வந்துசேர்ந்துள்ளது. சோவியத் யூனியனிலிருந்து அனுப்பப்பட்ட நான்கு 'மிக்'ரக போர் விமானங்கள் இந்தியாவுக்கு வந்துசேர்ந்துவிட்டதாகவும், அவை 'உரிய இடத்தில்' போய்ச் சேரும்வரை அவைபற்றிய தகவல் வெளியிடப்பட மாட்டாதென்றும் அரசாங்க வட்டாரங்களிலிருந்து தெரிகிறது.

### சோவியத்துடன் நீண்டகால வர்த்தகம்

சோவியத் யூனியனுடன் இந்தியா நீண்டகால வர்த்தக ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளவிருக்கிறது. இந்த ஒப்பந்தம் அடுத்த மாதம் மாஸ்கோவில் கைச்சாத்தாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஒப்பந்தம்பற்றி இந்தியாவிலுள்ள சோவியத் ஸ்தானிகர் நேற்று ஒரு வைபவத்தில் பேசுகையில் குறிப்பிட்டு, புதிய ஒப்பந்தம் 1968-ம் ஆண்டுவரை அமுலிலிருக்குமென்று தெரிவித்தார். வருடமொன்றுக்கு நூறு கோடி ரூபாய் பெறுமதியான வர்த்தகம் நடைபெறுவதற்கு இந்த ஒப்பந்தம் வசதிசெய்யுமென்றும் அவர் தெரிவித்தார். இப்பொழுது இந்தியாவில் 32 தொழிற்சாலைகள் சோவியத் யூனியனின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிடம் செய்பொருள்களையே சோவியத் யூனியன் வாங்குகிறது. மூலப்பொருள்களையல்ல.

### சென்னையில் கம்போடிய பிரதமர்

இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்யும் கம்போடியப் பிரதமர் இளவரசர் நொரடம்சிகானுக் நேற்று பங்களூரிலிருந்து சென்னை வந்து சேர்ந்தார். விமானநிலையத்தில் தமிழ்நாடு கவர்னர் விஷ்ணுராம்மேதி, முதன்மந்திரி திரு. கே. காமராஜ் ஆகியோர் வரவேற்றனர். இந்தியாவுடன் கம்போடியாவுக்குள்ள உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளத் தமக்கு வாய்ப்புக் கிடைத்ததையிட்டு தாம் பெரிதும் மகிழ்ச்சியடைவதாக இளவரசர் சிகானுக் கூறினர். பங்களூரில் இந்துஸ்தான் கடிகாரத் தொழிற்சாலைக்கு இளவரசர் சென்றிருந்தபோது அங்கு தயாரிக்கப்பட்ட இரு கைக்கடிகாரங்கள் இளவரசருக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இளவரசர் சிகானுக் தமிழ்நாட்டில் மகாபலிபுரத்துக்கும் பெரம்பூர் ரயில்பெட்டித் தொழிற்சாலைக்கும் செல்வார்.

### டில்லி நகரசபை வரவேற்பு

கிரேக்க மன்னர் போலுக்கும் ராணி பிரட்ரிக்காவுக்கும் டில்லிமக்கள் சார்பில் டில்லி நகரசபை நேற்றுமாலை ஒருவரவேற்பு உபசாரம் அளித்தது. இந்த வரவேற்பில் மன்னர் போல் பேசுகையில் இந்தியாவின் பழைய மாண்புகளையும் இக்கால சாதனைகளையும் காண்பதற்காக தாம் இங்கு வந்திருப்பதாகக் கூறினர். இந்தியா தனது முயற்சியில் வெற்றி பெற்று செழிப்புற்றேங்கும் எனத் தாம் நம்புவதாக அவர் கூறினர். மன்னரிடம் இரத்தினக் கம்பளம் ஒன்றையும் மற்றும் மூன்று கலைப்பொருள்களையும் நகர மேயர் நூர்தீன் அஹமத் வழங்கினர்.

### விநோபா சீன மொழி படிக்கிறார்

பூதான இயக்கத் தலைவர் ஆச்சார்யா விநோபாபாவே இப்பொழுது சீனமொழி படிக்க ஆரம்பித்துள்ளார்.

## சுவர் விழுந்து 100 பிள்ளைகள் மாண்டனர்

குயாயாகுயில் (ஈக்குவடோர்), பெப் 3

மத்திய ஈக்குவடோரின் கஞர் மாகாணத்தில் பிபிலியன் என்ற இடத்தில் தேவாலயத்தைச் சேர்ந்த கான்வென்ட் பள்ளிக்கூடத்தின் சுவரொன்று சென்ற வெள்ளிக்கிழமை இடிந்து விழுந்ததில் நூறுபிள்ளைகளும்நான்கு ஆசிரியர்களும் கொல்லப்பட்டனர். இந்தவிபத்தில் மாண்டவர்களில் மதர்அப்ரியர் கார்லோட்டாஸிரிட்டாவும் ஒருவர், இவர் பட்டம்பெற்ற இருபத்தைந்தாவது வெள்ளிவிழாக் கொண்டாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. தேவாலயச் சுவரும், கூரையும் இடிந்துவிழுந்தபோது சுமார் முந்நூறு கன்னியாஸ்திரீகளும், ஆசிரியர்களும், பிள்ளைகளும் அங்கிருந்தனர். இடிபாடுகளை அகற்றி சடலங்கள்நேற்று வெளியே எடுக்கப்பட்டன. பிள்ளைகளும் ஆசிரியர்களும் இவ்விதம் கோரமரணமடைந்ததையிட்டு ஈக்குவடோர் அரசாங்கம் ஒருநாள்துக்கமனுஷ்டித்தது.

## ரயில்வேக்கு தினசரி ரூ.30,000 வருமானம்

### ரயில்நிலையத் திறப்புவிழாவில் மந்திரி தகவல்

அநுராதபுரம், திங்கள்

பெருந்தொகையான செலவில் அமைக்கப்பட்ட அநுராதபுரம் புதிய ரயில் நிலையத்தை பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நேற்று காலை திறந்து வைத்தார்.

நவீன வசதிகளுடன் அமைந்துள்ள இந்த ரயில் நிலையத்தைத் திறந்து வைத்து பிரதமர் சிறிமா பேசுகையில் பொதுச் சொத்துக்களை மக்கள் தங்கள் சொத்துக்களாக நினைத்து பாவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

நிதிமந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்ல பேசுகையில், ரயில்வேக்கு வருடாவருடம் முப்பது லட்ச ரூபாய் நஷ்டமேற்பட்டு வருகிறதென்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தினால் சில தினங்களாக ரயில்வேக்கு தினசரி 30,000 ரூபாய் வருமானம் கிடைக்கிறதென்றும் கூறினர்.

கைத்தொழில் கலாசார அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவும் பேசினர்.

#### பாலம் திறப்பு விழா

இந்த நிகழ்ச்சிக்கு முன் மேற்கு ஜெர்மன் அரசாங்கம் நன்கொடையாக அளித்த எட்டுப் பாலங்களில் ஒன்று மல்வத்த ஓயாவுக்கு மேல் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பாலத்தை பிரதமர் குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்து பாலத்தின் மீது நடந்து சென்றார். இந்த வைபவத்தில் இலங்கையிலுள்ள மேற்கு ஜெர்மன் ஸ்தானிகர் டாக்டர் ஓர் பேசுகையில் 'மக்களை இணைபது பாலம்' என்று காலஞ்சென்ற பிரதமர் ஒரு சமயம் கூறியதை குறிப்பிட்டு இந்தப்பாலம் மேற்கு ஜெர்மனியும் இலங்கையையும் மேலும் நட்புறவில் இணைத்து வைக்கும் பாலமாக அமையுமென நம்பிக்கை தெரிவித்தார். இலங்கைக்கு ஜெர்மன் குடியரசு மேலும் உதவியளிக்குமென்றும் அவர் சொன்னர்.

## தங்கப் புத்தர் விக்கிரகம்

### சீனர் கொள்ளை

புதுடில்லி, பெப். 3

தவாங்கிலிருந்து சீனர்வெளியேறிச் செல்லவதற்கு முன்னர் அங்குள்ள பௌத்த மடத்தைச் சூறையாடிச் சென்றுள்ளதாக வட கிழக்கு எல்லை ஏஜன்சி சிவில் நிர்வாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பௌத்தமடத்திலிருந்ததங்கத்தினல் செய்யப்பட்ட புத்தர் சிலையையும் ஜரிகைத் துணிகளையும் மற்றும் பல பொருள்களையும் சீனர்கள் அபகரித்துச் சென்றுவிட்டனராம்.

## வெளிவிவகார மந்திரி புட்டோ

கராச்சி, பெப். 4

பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரியாக ஜுலபி புட்டோ நியமிக்கப்பட்டுள்ளார். வெளிவிவகார மந்திரியாகப் பதவி வகித்துவந்த ஜுலபி முகம்மதலி சென்ற மாதம் மாரடைப்பினல் மரணமடைந்ததைத் தொடர்ந்து ஜுலபி புட்டோ பதில் வெளிவிவகார மந்திரியாக நியமிக்கப்பட்டிருந்தார். இயற்கைவள, தொழில் மந்திரியாகப் பதவி வகித்த புட்டோ வெளிவிவகார மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளாரென்று ஜனதிபதி மாளிகையிலிருந்து வெளியான ஒரு அறிக்கை தெரிவித்தது.

## கோபால்ரெட்டிக்கு கௌரவம்

திருப்பதி, பெப். 3

திருப்பதி வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகம், மத்திய தகவல் மந்திரி திரு. கோபால் ரெட்டிக்கு "இலக்கிய கலாநிதி" என்ற பட்டத்தை வழங்கியிருக்கிறது.

## சென்னை ராஜ்யத்தில் ஜப்பானிய கமப்பண்ணை

சென்னை, செப். 3

ஜப்பானிய நெல் சாகுபடி முறைகள் பரீட்சார்த்தமாகச் செய்து காண்பிக்கப்படும் விவசாய செயல்முறை நிதர்சன பண்ணை ஒன்றை சென்னை ராஜ்யத்தில் ஜப்பான் விரைவில் ஏற்படுத்தும். இம்மாதிரி மொத்தம் நான்கு பண்ணைகளை நாடெங்கிலும் நடாத்த ஜப்பான் திட்டமிட்டுள்ளது. இப் பண்ணைகளில் 16 ஜப்பானிய நிபுணர்கள் 3 ஆண்டுகளுக்குப் பணியாற்றுவர்.

இந்தியாவுக்கும் ஜப்பானுக்குமிடையே ஏற்பட்டுள்ள புது உதவி ஒப்பந்தத்தில் இப் பண்ணைத்திட்டம் ஒரு பகுதியாகும். இவற்றுக்குத் தேவையான இயந்திரங்கள் கருவிகள் ஆகியவற்றையும் ஜப்பானே கொடுத்துதவும்.

## அதிசயம் ஆனல் உண்மை!

ஓவெறி (கிழக்கு நைஜீரியா), பெப். 4

இஸியுடுவின் முதல் தலைவராக 58 வருடங்கள் கடமையாற்றிய ஷீவ் அபி என்பவர் தமது 120-வது வயதில் நேற்றுக் காலமானர். இவருக்கு எட்டு மனைவியரும், 90 குழந்தைகளும், 207 பேரப்பிள்ளைகளுமுண்டு!

இறந்தவரின் ஒரு மகன், நைஜீரிய ஜனப்பிரதிநிதிகள் சபையில், பிரதம கொறடாவாகக் கடமையாற்றுகிறார்.

## கம்போடிய இளவரசர்

சென்னை, பெப். 3

கம்போடிய இளவரசர் நொரோடம் சிகானுக், இன்று தம் மனைவி சகிதம் சென்னை வந்து சேர்ந்தார்.

## 70 சவூதி வீரர் பலி

### யேமன் படையுடன் சண்டை

[illegible]ஆ, செப். 4

யேமன் தலைந[illegible]ன சஞவுக்கு வட கிழக்கி[illegible]0 மைல் தூரத்தில் சவூதி [illegible]ரேபியப் படையின் இரு அணிகளுடன் யேமன் குடியரசுத் துருப்புக்கள் சென்ற சனிக்கிழமை சண்டையிடவேண்டியேற்பட்டதென்றும் இதில் 60 சவூதி அரேபியர்கள் கொல்லப்பட்டதுடன் 13 பேர் காயமடைந்தனரென்றும் 35 பேர் கைது செய்யப்பட்டனரென்றும் சஞ ரேடியோ அறிவித்தது.

யேமன் குடியரசை வீழ்த்தி பழைய இமாமைமீண்டும் ஆட்சிபீடத்தில் அமர்த்துவதற்கு சவூதி அரேபியாவும் ஜோர்டானும் முயற்சிசெய்வதாக யேமன் குடியரசுத் தலைவர் மீண்டும் குற்றம்சாட்டினர்.

### ஞான வாக்கு

நமது விருப்பத்தை பிறர் மீது நாம் வலுக்கட்டாயமாகத் திணிப்பது பெரிய கொடுமையாகும். அது ஒருசில ஆங்கிலேயரடங்கிய அதிகாரவர்க்க ஆட்சியைவிட மிகவும் மோசமாகும்.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு தை மீ 23உ (5-2-63)


## புதிய ஞானோதயம்

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்திலே நடைபெற்ற தமிழரசுக்கட்சி வாலிப முன்னணிப் பொதுக்கூட்டத்தில் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அரசாங்கக் கட்சிமீது ஒரு முக்கிய அரசியல் குற்றச்சாட்டைச் சுமத்தினார். இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களை, இப்போதுள்ள அரசாங்கக் கட்சியும், இதற்குமுன் பிரதமராக இருந்த காலஞ்சென்ற பண்டாரநாயக்காவும் அவரது மந்திரிசபையும் ஏமாற்றிவிட்டனரென்றும் இவர்கள் தங்களுடன் செய்த ஒப்பந்தத்தை மீறியது பெரிய அரசியல் குற்றமாகுமென்றும், இதை ஆட்சேபிக்கும் முதல் அம்சமாக தமிழ்பேசும்மக்கள்சுதந்திரதினத்தைத் துக்கதினமாக அனுஷ்டிப்பதாயும் தெரிவித்தார். இதற்குப் பிரதமர் என்ன பதில் கூறமுடியும்?

மொழி விஷயமாக காலஞ்சென்ற பண்டாரநாயக்கா பலமுறை கொள்கையை மாற்றிக் கொண்டாரென்றாலும் அவர் தமிழரசுக்கட்சித் தலைவருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை வேண்டுமென்றே மீறியிருப்பாரென நாம் கருதவில்லை. அவர் அந்த ஒப்பந்தத்தை ஆதரித்து நீண்ட அறிக்கை வெளியிட்டதுடன் சிங்களப் பகுதிகளிலே பல கூட்டங்கள் போட்டு அதைப் பற்றி ஆதரித்துப் பேசினார். ஆனால் அச்சமயம் யு. என். பி. இந்த ஒப்பந்தத்தை எதிர்த்து பலத்த கிளர்ச்சியைச் செய்தது. அதைச் சமாளிக்க முடியாமலேயே ஒப்பந்தத்தை அவர் மீறவேண்டியதாயிற்று. ஏற்கெனவே எதிர்க்கட்சியில் அவர் இருக்கையில், மொழிப் பிரச்னையை சர்வகட்சி மகாநாடு கூட்டிப் பேசியே தீர்க்க வேண்டுமென்று கூறியபடி, தாம் அரசாங்க நிர்வாகப் பொறுப்பேற்றதும் செய்திருந்தால், நாட்டின் அரசியலே வேறுவிதமாக இருந்திருக்கும். அப்படிச் செய்யாமல், அவசரப்பட்டு தனிச்சிங்களச் சட்டத்தைக் கட்சிரீதியில் கொணர்ந்து பலத்த எதிர்ப்பிடையே நிறைவேற்றியதுதான் அவர் செய்த பெரும் அரசியல் தவறு.

ஸ்ரீமதி பண்டாரநாயக்காவின் தலைமையில் அமைக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேர்தலுக்குமுன் தமிழரசுக் கட்சியுடனே ஒப்பந்தம் செய்து கொண்டதென்றாலும் தேர்தலுக்குப்பின் அதை மீறியதற்கும் முக்கிய காரணம் அதே யு. என். பி.பற்றிய பீதிதான். கட்சிமுறையில் தீர்க்கப்படக் கூடிய பிரச்னையல்ல இது. அரசியல் நிர்ணய சபை அமைத்தோ, அல்லது சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டியோதான் தேசியமுறையில் இதைத் தீர்த்திருக்க முடியும். அதைவிட்டு, தங்கள் கட்சி பலத்தால் மட்டும் இதைத்தீர்த்துக்கொள்ளலாமென்று ஸ்ரீமாவோவின் அரசாங்கம்முற்பட்டதன் பயனே இன்று நாட்டிலுள்ள அரசியல் அவலநிலை.

இதை உணர்ந்தே பிரதமர் ஸ்ரீமா, யு. என். பி. தலைவரை அழைத்துப் பேசியிருப்பதுடன், சுதந்திர தினவிழா அறிக்கையிலும் பல பிரச்னைகளையும் தேசிய அடிப்படையில் தீர்க்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அவருக்கு இந்த ஞானோதயம் இப்போதாவது ஏற்பட்டது பற்றி நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஐக்கிய தேசியக்கட்சித் தலைவரும், பலமுக்கிய தேசிய பிரச்னைகளையும் தீர்க்கத் தாம் உதவி புரிவதாக பிரதமருக்கு வாக்களித்துள்ளதாகத் தெரிகிறது. இதுமிகவும் நல்லதே. ஆனால் இவ்விஷயத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ்ப்பேசும் மக்களே. அவர்களது பிரதிநிதிகளை அழைத்து, அவர்களது ஒத்துழைப்பையும் சம்மதத்தையும் பெற்றாலே இப்பிரச்னை தீரமுடியும். அதுதான் பிரதானம்.

ஆனால் இத்தலையங்கத்தை எழுதும்வரையில் தமிழ்ப் பேசும் மக்களின் பிரதிநிதிகளைப் பிரதமர் அழைத்துப் பேசியதாகத் தெரியவில்லை. சர்வகட்சி, தேசியரீதியில் முக்கிய பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமென்ற பிரதமரின் புதிய யோசனையை தமிழ்ப் பேசும் மக்கள் வரவேற்று ஆதரிக்கக் காரணமுண்டு. ஒரு தனிப்பட்ட கட்சியின் வாக்குறுதி ஒப்பந்தத்தில் அவர்கள் நம்பிக்கை இழந்துவிட்டதால் சர்வகட்சி தேசிய அடிப்படையில் தங்கள் பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்க்க உண்மையான முயற்சி இச்சமயம் செய்யப்படுமாயின், அதை அவர்கள் அலட்சியம் செய்து ஒதுக்க முடியாது. தேசாபிமானத்திலே தமிழர் யாருக்கும் பின்வாங்கியவரல்லர்.

---

# போலியோ தடுப்பு இயக்கம்

### ஏப்ரலில் ஆரம்பம்

கொழும்பு, திங்கள்

சுகாதார சேவை இலாகாவின் 'போலியோ' தடுப்பு இயக்கம், ஏப்ரலில் ஆரம்பமாகும். டாக்டர் அல்பேர்ட்சபின், மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் அதிகாரிகள் சிலர் இலங்கைக்கு கடந்த வாரம் விஜயம் செய்ததைத் தொடர்ந்து இந்த முடிவை சுகாதார சேவை இலாகாசெய்துள்ளது.

பிறந்தகுழந்தைகளுக்கு பால் கட்டுதல் முறை ஏற்கனவே ஆரம்பிக்கப் பட்டுவிட்டதென்றும், எட்டுவயதுக் குட்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கு பால்கட்டுவது, நாடுபூராவும் ஆரம்பிக்கப்படும் ஒரு இயக்கம் மூலமே நிறைவேறும்என்றும் சுகாதார சேவைகள் இலாகா அறிவித்துள்ளது.

போலியோ - தடுப்பு இயக்கத்தை இவ்வருட ஏப்ரல் ம தத்தில் ஆரம்பிக்குமுன்னர் போதியளவு மருந்துகள் கைவசம் கிடைத்துவிடுமென்று சுகாதார சேவைகள் இலாகா எதிர்பார்க்கிறது.

---

# நாட்டின் பண்பும் அதன் இலட்சியமும்

## நெருக்கடியிலும் காப்பதே முந்திய கடமை

### பட்டமளிப்பு விழாவில் இந்திய ஒலிபரப்பு அமைச்சர் உரை

திருப்பதி, பெப். 3

"நாம் நமது தேசியப் பண்பு பற்றிப் பெருமைப்படுகிறோம். ஆயினும் பரம்பரை நாகரிகத்தையே சார்ந்திருந்து வாழ்க்கை நடத்துவதில் திருப்தி அடையவில்லை. புதுப் படைப்புகளும் சக்திமிக்க செயல்களுமே நாட்டை உருவாக்குமென்ற செயல் வேகக் கருத்துடன் வாழ்க்கையை அனுசரிக்கிறோம்"

இவ்வாறு இந்திய யூனியன் ஒலிபரப்பு தகவல் அமைச்சர் திரு. கோபாலரெட்டி நேற்று மாலை இங்கு நடைபெற்ற சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் பேசினபோது குறிப்பிட்டார்.

யூனியன் அமைச்சர் தமது பேருரையில் மேலும் கூறியதாவது:

தாய் நாட்டின் மகிமையை உணர்ந்து அதை வலியுறுத்துவதை ஆதாரமாகக் கொண்ட தேசிய விமோசனத்திலிருந்து ஊக்கம் பெற்றவர்களாக நமது அரசியல் நோக்கங்களையும் சித்தாந்தத்தையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். மேனாட்டு அரசியல் அனுபவத்திலிருந்து தாராளமாகக் எடுத்துக் கொண்டு நமது பண்டைய நாகரிகத்திலிருந்து தற்செயலாக நேர்ந்த பண்புகளிலிருந்தும் சிறந்த அம்சங்களை எடுத்து இரண்டையும் இணைக்க முயன்றோம். நமது சிந்தையில் உருவான உணர்வும் நமது செயல்களின் பலன்களுமே சமீப காலத்தில் நமது தேசிய நோக்கையும் உருவாக்கியிருக்கின்றன.

நெருக்கடி சோதனைக் காலத்தில் நன்கு சோதிக்கப்பட்டுள்ள தேசிய லட்சியங்கள் கொள்கைகள் முதலியவற்றில் விசுவாசம் குறைவது பலவீனத்தின் அறிகுறியாகும். நமக்கென்றுள்ள நமது சொந்த நாகரிகத்துக்கு முதல் அபாயம் வந்தவுடனேயே அதன் பலத்தில் நம்பிக்கை குறையக் கூடாது. அதற்குப் பதிலாக நாம் நம்மை அரண் செய்து கொள்ளவேண்டும்.

சீனாவின் ஆக்கிரமிப்பைக் குறிப்பிட்டு அமைச்சர் பேசுகையில், சீனாவின் ஆக்கிரமிப்பு நமது சுதந்திரம், நமது ஜனநாயகப் பண்புகள் நமது சர்வதேச சமாதான முன்னேற்றக் கொள்கை ஆகியவற்றைத் தாக்குவதாகுமென்றும் ஆசியாவின் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்கும் அரண் என்ற வகையில் இந்த அபாயத்தை தைரியத்துடனும் தன்நம்பிக்கையுடனும் எதிர்த்து நிற்க நாம் கடமைப்பட்டிருக்கின்றோம் என்றும் கூறினார். "நமக்காக மட்டுமின்றி உலக மக்களுக்கு நாம் இயற்ற வேண்டிய கடமை என்ற வகையில் நாம் இதைச் செய்ய வேண்டும்" என்றார்.

"அதனுடைய எல்லா உட்கருத்துக்களுடனும் கூட இந்த அறைகூவலை நமது நாடு ஒருமுகமாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆண்டவன் அருள் வலியாலும் நமது விமோசனத்தில் நமக்குள்ள நம்பிக்கையாலும் மனிதனின் இழிவு அடிமைத்தனம் யுத்தவெறி சக்திகள் மீது மனிதனுடைய மாண்பு சுதந்திரம் சமாதானம் ஆகிய நல்லியல்புகள் வெற்றிபெறச் செய்வோமாக" என்று அமைச்சர் திரு. ரெட்டி முடிவாகக் கூறினார்.

---

# கட்சித்தலைவர்களின் வட்டமேசை மகாநாடு

## இலங்கை—இந்தியர் பிரச்னைபற்றி தொழிலாளர் கழகம் யோசனை

யாழ்ப்பாணம், செவ்வாய்

இலங்கைத் தமிழரசுக் கட்சி எம். பி. க்கள் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் கொழும்பில் கூடி எதிர்கால நடவடிக்கைகள்பற்றி ஆலோசிக்கவிருக்கிறார்கள். முக்கியமான பல பிரச்னைகள்பற்றி இவர்கள் முடிவு செய்வார்கள் என்று தெரியவருகிறது.

வெள்ளிக்கிழமை இலங்கைத் தொழிற் கழகப் பிரதிநிதிகள் கோஷ்டி தமிழரசு எம். பி. க்களைச் சந்தித்து இலங்கை இந்தியர் பிரச்னை சம்பந்தமாக அவர்களது கருத்து என்ன என்பதனைத் தெளிவுபடுத்தவிருக்கிறார்கள். இலங்கைத் தொழிற் கழக உப தலைவர் திரு. கே. ஏ. இராமன் இதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கையில், [illegible]லங்கை இந்தியர் பிரச்னை[illegible] தீர்வு காணும் எண்ண[illegible] அரசாங்கத்திற்கு இருக்கு[illegible]ல் தேசிய பதிவு மசோதா[illegible] பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படுவதனை முதலில் ஒத்திவைக்க வேண்டும் என்றும், தேசிய பதிவுமசோதா நிறைவேற்றப்பட்ட பின் இலங்கை இந்தியர் பிரச்னைபற்றிப் பேசுவதில் அர்த்தமேயில்லை என்றும் தமிழரசுக் கட்சியின் கருத்துக்களைத் தெரிந்து கொண்ட பின்னர் இதர கட்சிகளுடன் இந்தியர் பிரச்னை சம்பந்தமாக வட்டமேஜை மகாநாடு கூடி நடவடிக்கை எடுப்பதுபற்றித் தீர்மானிக்க முடியுமென்றும் தெரிவித்தார்.

---

# தேசிய பதிவு மசோதா

கொழும்பு, திங்கள்

வியாழக்கிழமை காலை கூடும் அரசாங்க பார்லிமெண்டரிக் குழு, தேசிய பதிவு மசோதா பற்றியும் ஆராயும்.

அரசாங்க பார்லிமெண்டரிக் குழுவின் நிகழ்ச்சிநிரலில் இந்த மசோதா முன்னரே இடம்பெற்றிருந்தபோதிலும், இம் மசோதா தயாராகாத காரணத்தினால் குறிப்பிட்ட காலத்தில் விவாதிக்கப்படவில்லை.

நாளை கூடுவதாகவிருந்த அரசாங்க பார்லிமெண்டரிக் குழு, அனுராதபுரத்தில் நடைபெறும் சுதந்திரதின நிகழ்ச்சிகள் காரணமாக வியாழக்கிழமை காலை கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## ஐயாறன் எழுதுவது

நேற்று வானமெல்லாம் கரிய மேகங்களால் சூழ்ந்திருந்தது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல; அநுராதபுரத்திலும் அப்படித்தானாம். நீல வானம் சுதந்திர தினத்தன்று இப்படிக் கறுப்பாக மாறுவானேன்? இலங்கையின் இன்றைய அரசியல் நிலையைக் கண்டு இயற்கையன்னையும் துக்கம் கொண்டாடுகின்றாளா? சிறு சிறு தூற்றல்களாகக் கண்ணீர் சிந்துகிறாளா?

* * *

குளியாப்பிட்டி முழுக்க முழுக்க சிங்களவர் நிறைந்த ஊராம். குருநாக்கல் பக்கமுள்ளது. பல்லாண்டுகளுக்கு முன்பாக தாவடியைச் சேர்ந்த அப்பாக்குட்டியார் அங்கு சென்று கடைவைத்து வியாபாரம் செய்து நல்ல செல்வம் திரட்டினார். அது பெரிய காரியமல்ல. அங்குள்ள சிங்கள மக்களின் அன்பையும் அபிமானத்தையும் பரிபூரணமாகப் பெற்று, "அப்பாக்குட்டியார் எங்களுக்கே உரியவர் தாவடிக்கல்ல" என்று குளியாப்பிட்டியைச் சேர்ந்த ஒரு சிங்கள தலைமை ஆசிரியர் தம் குடும்பத்துடனே யாழ்ப்பாணம் வந்து இக்காலத்திலே ,கிரங்கமாகக் கூறுவதாயிருந்தால் அதை நம்பமுடிகிறதா?

நம்பமுடியாத இந்தப் பேச்சை அப்பாக்குட்டியாரின் புதல்வரான இலங்கை நேசன்—கலைமகள் திருமணத்தில் நேற்றுக்காலை கேட்டேன். மிக மகிழ்ச்சியும் புது நம்பிக்கையும் அளிப்பதாக இருந்தது. தமது தந்தையின் தொழிலை மேற்கொண்டு வெற்றிகரமாக நடத்த, புதல்வன் தன் படிப்பையும் பாதியில் விட்டுவிட்டுச் சென்றாராம். அது மட்டுமல்ல. லட்சப்பிரபுவான மாப்பிள்ளை சீதனம் எதுவுமே வேண்டவில்லையாம். பல வகையாலும் தமிழ் வாலிபர்களுக்கு வழிகாட்டும் முறையிலே இலங்கை நேசன் நடந்துகாட்டுவது பாராட்டத்தக்கது.

* * *

இக்கல்யாணத்துக்குசென்னையிலிருந்து ராதா—ஜயலட்சுமி, கிளாரினெட் ஏ. கே. ஸி. நடராஜன் கோஷ்டியினரும் வருவதாக அழைப்பிதழிலேயே குறிப்பிட்டிருந்தனர். மாப்பிள்ளையும் இதற்காக எவ்வளவோ முயன்றாராம். ஆனால் இங்கு இன்று நடப்பது டயஸின் ஆட்சி. சிறிமா ஆட்சி கூட அல்ல. இந்த ஆட்சியில் இந்தியாவிலிருந்து கலைஞர் யாருமே கண்டிப்பாக வரப்படாதென்று உத்தரவாம்!

"அறம் செய விரும்பு" என்றுதான் பாட்டியார் கூறினாரேயன்றி, "அறம் செய்" என்று கூடச் சொல்லவில்லை. இந்தக் கலைமகளின் திருமணத்துக்கு பல முதல் நம்பர் கலைஞர்களை தமிழ் நாட்டிலிருந்து தருவிக்க விரும்பி, அதற்கான பகீரத முயற்சிகள் செய்ததே அந்தக் கலைமகளுக்குத் திருப்தி அளித்திருக்கும். டயஸின் இந்த கொடுமை ஆட்சி சீக்கிரத்தில் மாறவேண்டுமென்று, அந்தக் கலைமகளை பல ரஸிகர்களுடனும் சேர்ந்து வேண்டுகின்றேன்.

இந்தத் தடையும்கூட ஒரு விதத்தில் நல்லதுதான் என்று தோன்றியது. இங்குள்ள பல கலைஞர்களுக்கு இதனால் நல்ல 'சான்ஸ்' கிடைக்க முடிந்ததாம்.

* * *

காலஞ்சென்ற திருமதி பாலாம்பிகை சிவசுப்பிரமணியத்தை நினைக்கும்போது, எனக்கு கஸ்தூரிபாய் காந்திதான் நினைப்புவருகிறது. காந்திக்கு மனைவியாக பல்லாண்டுகள் இருந்துவந்தது சுலபமான காரியமன்று. 37 வயதுவரை மனைவியாகவும், பின்னர் தாயாகவும் மாறி, மகாத்மாவின் துணையாக இருந்து உதவிவந்தார் கஸ்தூரிபாய். பொது வாழ்வில் ஈடுபட்டவர்

(5-ம்பக்கம் பார்க்க)

# கல்விமுறையைப் பாதிக்கும் மாற்றங்கள்

## அரசாங்கம் எடுத்ததால் ஏற்பட்டன என்கிருர் ஆசிரியர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

"சமுதாயத்தின் முற்போக்கான மாற்றங்களை இலவசக் கல்வி கொண்டுவந்தது. இலங்கை சுதந்திரமடைந்தபின் கல்வி உலகில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. கல்விகற்பிக்கும் முறையிலும் கூட பெரும் மாற்றம் ஏற்பட்டது: கல்வியுலகில் புரட்சிகரமான மாற்றம் தாய்மொழி மூலம் கற்கும் வசதியாகும். சமீபத்தில் நிகழ்ந்த கல்வி முறையைப் பாதிக்கக்கூடிய சம்பவம் அரசாங்கப் பாடசாலைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டமையே" என்று வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் 47 வது வருடாந்தக் கூட்டத்திறகுத் தலைமைவகித்துப் பேசிய ஏ. ஆர். இராசநாயகம் கூறினர். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு இராசநாயகம் தொடர்ந்து பேசியதாவது.

காலத்திற்குக் காலம் ஏற்பட்ட மாறுதல்கள் பெரும் விவாதங்களை நாட்டில் ஏற்படுத்தின. இத்தகைய விவாதங்களினல் மக்களிடையே அபிப்பிராய பேதங்கள் மலிந்து ஒற்றுமையின்மை நிலவுவதாயிற்று. எம்மைப் பொறுத்தவரையில் ஆசிரிய சங்கம் மிகத் திறமையாக முற்போக்குடன் செயலாற்றி வருகிறதெனக் கூறவேண்டும்.

### திருப்தியடைய இடமில்லை

எதுவித அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டபோதிலும் எமது நிர்வாக விஷயத்தைக் கலந்துரையாடி நடுநிலையுடன் முடிவுகாணும் மரபு எம்முடையதே. இந்த நம்பிக்கையுடன்தான் அரசாங்கம் பாடசாலைகளை நமது பரிபாலனத்தின் கீழ் கொண்டுவந்ததனுல் எமது பிரச்னைகளைத் தீர்க்க வேண்டும். ஆசிரியரது உரிமைகள் யாவும் பாதுகாக்கப்படும் என்று கூறப்படுவதனை வரவேற்கிருேம். இருவருடகால எல்லைக்குள் இப்புதிய சகாப்தத்தைப் பற்றி நன்மை தீமை சொல்வது சுலபமானதல்ல. ஆனல் நடக்கும் விஷயங்களை நாம் உற்றுநோக்கினல் நாம் திருப்தியடைய இடமில்லை. தற்போது ஆசிரியராகிய எம்மைப் பெரும் ஆபத்து ஒன்று எதிர்நோக்கியுள்ளது. ஆசிரியர்கள் அரசாங்க உத்தியோகஸ்தர் என்று அரசாங்கம்கருதுகிறது. நமது தற்போதைய இன்னல்களுக்குஇந்த எண்ணமே காரணமாகும்.

ஆசிரியர்களின் சம்பளப்படி உயர்ச்சி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆசிரிய இடமாற்றத்திலும் அரசியல்வாதிகள் தலையிடுகின்றனர். ஆசிரியர் பலவீனப்பட்டு கஷ்டமுறுகின்றனர். எனவே நாமே நமது பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முயலவேண்டும்.

எமது தொழில் மக்களை மனிதராக வாழச் செய்வபத. ஆசிரிர்கள் பகிரங்க சேவை விதிகளுத்கமைந்து மற்றைய பகிரங்க சேவையாளர்களைப் போல அரசாங்கத்தின் கொள்கைக்கு கடமையாற்றுபவர்களல்ல. ஆசிரியர்கள் தமது தொழிலிலும் சேவையிலும்சுதந்திரத்தைதே பெரிதாகக் கருதகின்றனர்.

### சுதந்திரமும் உரிமையும்

தொழிற் சுதந்திரமும் அரசியல் உரிமையும் இல்லாவிட்டால் நாம் உயிரற்ற இயந்திரங்களாவோம். நாம் அனைவரும் ஒன்றுபட்டு நமது தொழிலின் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

கல்வி அமைச்சர் கல்விச் சேவைச் சபை ஒன்றினை நிறுவ முயற்சித்து வருவதாக அறிகின்ருேம். வரப்போகும் கல்வி மசோதாவில் அது இடம்பெறுமென அறியப்படுகிறது. இது எமக்கு எதிர்காலத்தில் நம்பிக்கையையூட்டுகின்றது. கல்வியின் முன்னேற்றமும் ஆசிரியரின் நலனும் ஆசிரியர் சங்கங்களின் கையிலேயும்தான் தங்கியுள்ளது.

மற்றும்பலர் பேசினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வர்த்தக கலை மன்ற ஆண்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

அகில இலங்கை வர்த்தககலை மன்றத்தின் 1-வது ஆண்டு விழா யாழ்ப்பாணம் உயர் கலை மன்றத்தில் யாழ்-மாவட்ட நீதிபதி செ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரையை, மன்ற உப- தலைவர் திரு. சு. சி. இளம்பிறைநாதன் நிகழ்த்தினர். கலைப்புலவர் க. நவரத்தினத் உருவப்படம் தலைவரால் திரைநீக்கம்செய்யப்பட்டது. கோப்பாய் எம்.பி. மு. பாலசுந்கரம், வர்த்தகக் கலை மன்றத்தின் வளர்ச்சி குறித்தும் இனிமேல் இம்மன்றம் ஆற்றவேண்டிய சேவைகுறித்தும் சொற்பொழிவாற்றினர். வர்த்தகக்கல்விக்கு உரிய அந்தஸ்தைப் பெறும் வரையில் மன்றம் போராட வேண்டும் எனவும் மன்றத்திற்கு தன்னுலான ஒத்துழைப்பை நல்குவதெனவும் வாக்குறுதி அளித்தார்.

மன்றச் செயலாளர் திரு. மா. புவனேந்திரன் ஆண்டறிக்கையையும் மன்றத் தனதிகாரி திரு. வ. க. பாலசுப்பிரமணியம் வரவு செலவுக் கணக்கையும் வாசித்தனர். இலங்கைப் பல்கலைக் கழக பொருளியல் விரிவுரையாளர். பாலகிருஷ்ணனதும் தொழில் நுட்பவிசாரணைச் சபை உறுப்பினர் கலாநிதி சு. ஞானலிங்கத்தினதும் மற்றும் வாழ்த்துச் செய்திகளும் வாசிக்கப்பட்டன. முன்னைநாள் ஆசிரிய சங்கத் தலைவர் ந. சபாரத்தினமும் மன்ற போஷகர்கள் திரு. சி. இராமலிங்கம் ஆசிரியர் திரு.க. சபாநடேசன் ஆசிரியர் ஸி. பத்மநாதன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்கள். கட்டுரைப் போட்டியில் பரிசில் பெற்றவர்களுக்கு முதலியார் வை. மகேசன் பரிசில்களையும் தராதரப் பத்திரங்களையும் வழங்கினர்.

எருக்கலம்பிட்டி மத்தியமகா வித்தியாலய அதிபரால் அன்பளிக்கப்பட்டதங்கப்பதக்கத்தை முதலாம் இடத்தைப் பெற்ற வீ. கந்தசாமி பெற்ருர். உடுவில் எம். பி. தருமலிங்கத்தால் அன்பளிக்கப்பட்ட தங்கப்பதக்கத்தை செல்வி. கண்மலர் சோமசுந்தரம் பெற்ருர். மன்ற உறிப்பினர் வ. க. பாலசுப்பிரமணியம் நன்றி தெரிவித்தார். இறுதியில் திரு. தியாகராசாவின் நூதன இசைக் கச்சேரியும் இடம் பெற்றது.

---

கொழும்பு, திங்கள்

மாஸ்கோவிலுள்ள இலங்கை-சோவியத் நட்புறவு சங்கத்தின் உபதலைவரும் ரஷ்ய சம்மேளனத்தின்சுப்ரீம்கோர்ட் உபதலைவருமான திருமதி நினசேர்ஜீவா, இலங்கையில் ஒரு வாரகாலம் தங்கிய பின்னர் நேற்று சோவியத் யூனியன் பயணமானர்.

## ஐயாறன்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

களுக்கு வாழ்க்கைப்படுபவரின் நிலையும் பெரிய தியாக வாழ்வுதான்.

உத்தம சிவபக்தையான அன்னை கஸ்தூரிபாய், உயிர் துறந்தது புண்ணிய தினமான சிவராத்திரியன்று. உறுதியான முருக பக்தையான பாலாம்பிகை அம்மையார் பிரிந்ததும், முருகனுக்கு மிக உகந்த கார்த்திகை நட்சத்திரம் அன்றுதான். இது தற்செயலா? அவர் ஆத்மா முருகனின் திருவடி நிழலை அடைந்துவிட்டதற்கு இது நல்ல அடையாளமென்றே ஆஸ்திகர் சொல்வர்.

அவர் முருக பக்தை மட்டுமல்ல. சமூக சேவகி. சத்தியாக்கிரக காலத்தில் யாழ்ப்பாணக் கச்சேரி அடியில் இருந்து, தேவார திருமுறை பஜனைகளை நடத்தி, மற்றவர்களுக்கு உற்சாகமூட்டிய காட்சியெல்லாம் என் மனக் கண் முன் தோன்றுகிறது.

உத்தமியான அந்த அன்னையைப் பிரிந்து வருந்தும் ஐயாவுக்கும் மற்றும் அக்குடும்பத்தாருக்கும் என் மனப்பூர்வமான அனுதாபங்கள்.

## கறுப்புக்கொடி..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிகிறது.

காங்கேசன் துறையில்பெரும்பாலான வீடுகளிலும் வர்த்தக நிலையங்களிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டன. யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தபோதிலும் சில நிலையங்களில் ஒரு கதவு திறக்கப்பட்டு வியாபாரம் செய்யப்பட்டது.

சுன்னுகம் சந்தையில் சிறிய அளவில் வியாபாரம் நடந்துகொண்டிருக்கக் காணப்பட்டது.

கொடிகாமம், சாவகச்சேரி, பருத்தித்துறைப் பகுதிகளில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது. கொடிகாமம் சந்தையில் வியாபாரம் செய்யவந்த சிலர் வேண்டுகோள் மீது திரும்பியதாகத்தெரியவருகிறது.

கோப்பாய்த் தொகுதியில் கடைகள் அடைக்கப்பட்டு கறுப்புக்கொடிகள்பறக்கவிடப்பட்டு இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கடைகள், வியாபாரஸ்தலங்கள், சுருட்டு உற்பத்திச்சாலைகள் ஆகியனவும் மூடப்பட்டிருந்தன.

சில கடைகளில் ஒரு கதவு திறக்கப்பட்டு வியாபாரம் நடத்தப்பட்டிருக்க காணப்பட்டது.

சந்தியில் விடப்பட்டிருந்த கறுப்புக்கொடிகளை சாவகச்சேரி பொலிசார் அகற்றியதாக அறிவிக்கப்பட்டது.

பளையில் கடைகள் திறந்திருந்தன.

# 'குடியேற்றத் திட்டங்களில் குடியேறவேண்டும்'

## பொதுக்கூட்டத்தில் டாக்டர் நாகநாதன் யோசனை

யாழ்ப்பாணம், திங்கள்

'இன்றைய அவலநிலைக்கு அரசாங்கத்தின் பொறுப்பற்ற செயல்களே காரணமாகும். ஒரு நாட்டின் அரசியலை நடத்தும் கட்சிக்குப்பல பொறுப்புகள் உண்டு. இவற்றுள்மிக முக்கியமானது அரசியலை நெறிமுறையில் நடத்துவதாகும். ஆட்சிபுரிவோர் படைப் பலத்தால் வெற்றிகாணமுடியாது. நீதியான ஆட்சி முறையினலேதான் வெற்றிகாணமுடியும்' என்று பண்டித வித்துவான் கா. பொ. இரத்தினம் இலங்கைத் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணிப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் அமைக்கப்பட்ட வன்னியசிங்கம் அரங்கில் ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு திரு. அருணுசலம் தலைமை வகித்தார்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

தமிழரசுக்கட்சி மக்களிடையே செல்வாக்கை இன்னும் இழக்கவில்லை. ஆனல் இன்றைய அரசாங்கக்கட்சி தனது ஆதரவை இழந்து வருகிறது. ஆனல் ஒரு தேர்தலைநடத்தி யாருக்கு அதிக ஆதரவுஉண்டு என்பதனை நிர்ணயிக்க உடன்படவருமாறு சவால் விடுகிருேம். யாழ்ப்பாணத்தில் எந்தத தொகுதியிலும் அமைச்சர்கள் யாராவது போட்டியிட விரும்பினல் அந்தத் தொகுதி அங்கத்தவர் பதவியிலிருந்து விலகிப் போட்டியிட ஆவன செய்வோம் என்பதனைக் கூறுகிருேம்.

### அறம் வெல்லும்

இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து சிங்களமும் தமிழும் ஆட்சி மொழியாக இருந்தன. 1956-ம் ஆண்டுக்குப் பின்னர் தனிச் சிங்களச்[illegible]ம் நடைமுறைக்கு வந்தபின்[illegible]ரே தான் இலங்கையின் அ[illegible]ல நிலை ஆரம்பமானது தமி[illegible]சுக் கட்சியும் தமிழரும் தமிழுரிமைப் போராட்டத்தில் வெற்றி பெற மாட்டார்கள் என்று சோர்வடைபவர்கள் அறம் வல்லும் என்பதனையுணர வேண்டும்.

சிங்களம்மட்டும் சட்டத்தால் தமிழரின் மொழியுரிமை பறிக்கப்பட்டது. இலங்கை மக்களின் நல்வாழ்க்கையையும் நலத்தையும் விரும்புபவர்கள் தமிழுக்கு உரிமைவழங்க வேண்டும்.

இந்நாட்டில் இனஒற்றுமை சமய ஒற்றுமை பொருளாதார விருத்தி அறநெறி வாழ்வு முதலிய நிலைக்கவேண்டுமெனின் மந்திரி சபையிலிருந்து நீதிமந்திரி சாம். பி. சி. பெர்ணுண்டோ, இலாகா இல்லாத மந்திரி திரு. ஆர். டயஸ் பண்டாரநாயகா ஆகியவர்கள் நீக்கப்படவேண்டும்.

### குடியேற வேண்டும்

நல்லூர் எம். பி. டாக்டர் இ. எம். வி. நாகநாதன் பேசும்போது கூறியதாவது:

வடக்கு கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காக மிகக் குறைந்த அளவிலேயே பணம் செலவிடப்படுகின்றது. அரசாங்கம் எம்மை அழித்துவிடவே முயல்கின்றது. எமது பண்பாட்டை அழித்தொழித்துவிட எவராலும் முடியாது. எமது குழந்தைகளுக்கு நாம் புத்துயிரும் ஊக்கமும் அளிக்க வேண்டும். வேலையில்லாத்திண்டாட்டத்தைப் போக்க நம்மவர்கள் பாடுபடவேண்டும். நாமே நமது ஜீவனத்தை நடத்தி எமது குடியுரிமை பறிபோகாத வகையில் குடியேற்றத் திட்டங்களில் ஈடுபடவேண்டும். இத்திட்டங்களில் குடியேறுவதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கிவிடும். மன்னர் வவனியா ஆகிய பிரதேசங்களில் பெருமளவில் குடியேற வசதி உண்டு.

நாம் எவர்க்கும் அடிமைகளல்லர் இந்த எண்ணம் ஒவ்வொருவரது உள்ளத்திலும் உதயமாக வேண்டும். இல்லையெனில் நாம் அடிமைகளாகவே வாழ்வோம் நம்மை ஒழிக்க முயலும் அரசாங்கம் எமக்கு வேண்டாம் என்ற எண்ணம் முதலில் உதயமாக வேண்டும். ஜாதி வேற்றுமை ஒழியவேண்டும்.

### இளைஞர்களை ஒன்று படுத்தவேண்டும்

திருமலையைச் சேர்ந்த திரு. வீரசுபபிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

எதிர் வருகின்ற போராட்டங்கள் கடந்த காலப் போராட்டங்கள் போல அமையாமல் தமிழ் இனத்தின் இளைஞர்களை ஒன்று படுத்த வேண்டும். நமது நீண்ட போராட்டங்கள் வெற்றியளிக்க வேண்டுமானுல் புமது குறுகிய போராட்டங்கள் முதலில் வெற்றியளிக்க வேண்டும்.

ஜனுப் கே. எஸ். ஏ. கபூர் பேசும்போது தெரிவித்ததாவது:-

ஒரு மொழி வாழ்ந்தால் தான அம்மொழிக்குரிய இனம் வாழமுடியும். மொழி அழிந்தால் அல்லது அழிக்கப்பட்டால் இனறும் தாகைவே அழிந்துவிடும்.

மொழியின் அடிப்படையில் இலங்கையில் இரு பெரும் தேசிய இனங்கள்தான் வாழ்கின்றன. இதில் சிங்கள தேசிய இனத்தைவிட தமிழ் தேசிய இனத்திற்குச் சில சிறப்பியல்புகள் உண்டு. முஸ்லிம் மக்களின் தாய் மொழி தமிழ். சிங்கள ஆட்சியால் தமிழும் அதற்குரிய பாண்பாடுகளும் அழிக்கப்படுகின்றன. மொழியுரிமைப் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கும் நாடுகளில் அம்மொழிக்குரிய மக்கள் எதனை இழப்பினும் மொழியை இழக்கத் துணிய மாட்டார்கள். மதஅடிப்படையில் மொழியின் உயர்வைக் கணிக்கும் விசித்திரமான பழக்கம் இலங்கையில் மட்டுமே காணக்கூடியதாக உள்ளது.

### கறுப்புக்கொடி ஏன்?

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழரசுக் கட்சியைக் கறுப்புக்கொடிக் கட்சி எனச் சிலர் வர்ணிக்கிருர்கள். இன்று தமிழ் பேசும் மக்கள் அடைந்திருக்கும் இழிவு இன்னல்களையிட்டு நாம்அனுபவிக்கும் துயரத்தின் சின்னமே கறுப்புக்கொடி. ஆங்கில எஜமான்களை அகற்றி நம்மை நாமே ஆளாது சிங்கள ஆட்சியில் சிக்கவைத்த தினத்தைக் கறுப்புக்கொடிகளுடன் துக்கமாகவே அனுஷ்டிக்கிருேம். நமது இழிநிலையை ஞாபகமூட்டும் சின்னமே கறுப்புகொடி. அந்த இழிவைப் போக்கி சுதந்திரம்பெறத்தூண்டும் தூண்டுகோலும் அதுவே என்று நாம் சுதந்திரமடைகிருேமோ அன்று தான் சுபீட்சத்தை எய்தமுடியும். சிங்கள ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள் இங்கு பவனிவரும் அமைச்சர்களுக்கு நாம் கறுப்புக்கொடி காட்டுகின்ருேம் அவர்களுடைய ஆட்சி இழைக்கும்அக்கிரமங்களுகது நமது எதிர்ப்பைக் காட்டவே கறுப்புக்கொடிகளை காட்டுகின்ருேம். நாம் சுதந்திரமான புருஷர்களாக வாழ உறுதி கொள்ளவேண்டும் ஈழத்தில் மூவர்ணக்கொடி பறக்கும் வரை கறுப்புக்கொடி பறக்கவே வேண்டும். வேறும் பலரும் பேசினர்.



# மாணவர் மலர்



துப்பறியும் கதை

## பறக்கும் பாம்பு

— மகான் —

(2)

'டிரிங்...டிரிங்......' என்று அலறிக்கொண்டிருந்த டெலிபோனின் றிசீவரை எடுத்தார் சி. ஐ. டி. ஷகான்.

"ஹலோ... சி.ஐ.டி. ஷகான் பேசுகின்றேன்....ஓ......இன்ஸ்பெக்டர் பிரான்சிஸா......குட்மோர்ணிங்... மோர்ணிங்... அதற்கென்ன, நான் இப்பொழுது வீட்டில்தான் இருக்கின்றேன். அவசியம் ஏற்பட்டால் நானே உங்களைப் பார்க்கின்றேன்...... ஆ... ஓ...ஐ...ஸீ... சரி, உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றேன்..." கிளிக். டெலிபோன் றிசீவர் வைக்கப்பட்ட சத்தம் கேட்டது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் பிரான்சிஸின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார் சி. ஐ. டி. ஷகான். சி. ஐ. டி. ஷகானின் கண்கள், அவர் கையிலிருந்த தினசரிப் பத்திரிகையில் கொட்டை எழுத்துகளில் பிரசுரிக்கப்பட்டிருந்த செய்தியை ஊடுருவின.

∴ ∴ ∴

**விஷப் பாம்புக்கு மூவர் பலி!**

மட்டக்களப்பு, வியாழன்

மட்டக்களப்பு நகரில், கடந்த மூன்று தினங்களில் விஷப் பாம்புக்கு மூவர் பலியாகியிருக்கிறார்கள். மக்கள் மிகுந்த பீதி கொண்டுள்ளனர்! பறக்கும் விஷ நாகமொன்று தனது வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு, மக்களைப் பழிவாங்குவதாகத் தெரியவருகிறது. மட்டகளப்பு விஷயம், இலங்கை பூராவும்......

∴ ∴ ∴

'எதிரொலி' தினசரிப் பத்திரிகையின் முதற் பக்கத்தில் வெளியிடப்பட்டிருந்த செய்தியை முற்றிலும் கவனமாகப் படித்த சி. ஐ. டி. ஷகானுக்கு பற்பல எண்ணங்கள் தோன்றின. செய்தி முழுவதையும் படித்து முடிந்த அவர், சிந்தனை வலையில் விழுந்த ஒரு சிலந்திப்பூச்சி மாதிரி எதையோ தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார். ஷகானின் நெற்றியில், நெளிவு நெளிவாகவிருந்த சுருக்கங்களும், அவர் தனது கீழ் உதடுகளை அடிக்கடி பற்களால் கடித்துக்கொண்டிருந்த விதமும்; சி. ஐ. டி. ஷகான், அதிகமாக சிந்திக்கின்றார் என்பதை வெளிப்படுத்தின. ஐந்து நிமிடங்கள் மறைந்தன.

'ஹலோ ஷகான், குட்மோர்ணிங்.'—ஷகானின் வீட்டு வாசற்படியில் காலடிவைதத பொலிஸ் இன்ஸ்பெக்டர் பிரரன்சிஸ் 'ஆங்கில வணக்கம்' செலுத்தினர். பதிலுக்கு சி. ஐ. டி. ஷகானும் 'குட்மோர்ணிங் பிரான்சிஸ்' என்றார். இருவருக்குமிடையே பேச்சுகள் ஆரம்பித்தன.

'ஸார் கோப்பி...' என்றான் ஷகான் வீட்டு வேலைக்காரன் வெங்கடாசலம் 'தாங்கியூ' என்று சொல்லிக்கொண்டே கோப்பிக் கோப்பையை எடுத்தார் இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ். பேச்சுகள் தொடர்ந்தன.

'நீங்கள் சொல்வதைப் பார்த்தால், பறக்கும் விஷநாகம் தனது பழியைத் தீர்த்துக் கொள்வதற்காக மக்களைப் பழிவாங்குகிறது...என்ன அப்படித்தானே பரான்சிஸ்...'என்றார் சி. ஐ. டி. ஷகான்.

'ஆமாம். கடந்த மூன்று நாட்களிலும் மரணமானவர்களைப் பரிசோதனை செய்ததில், அவர்கள் கொடிய விஷப்பாம்பினுல் கடிபட்டு மரணமாகியிருக்கிறார்கள் என்பதும், இறந்தவர்களின் உடலில் மிகவும் கொடிய விஷம் ஏறியிருக்கிறதென்பதும் தெரியவந்தது. டாக்டர்களின் அறிக்கை மட்டுமின்றி மரணவிசாரணை அதிகாரியின் அறிக்கையும் இதைத்தான் எடுத்துக் கூறின.' என்றார் இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ்.

ஓகோ...அப்படியா...? பறக்கும் பாம்பல்லவா மட்டக்களப்பு மக்களை பீதிக்குள்ளாக்கி வருகிறது. பாம்பின் பற்கள் பதிந்த அடையாளம் காணப்பட்டதா?

ஆமாம் ஷகான். இறந்தவர்களின் உடலில், அதாவது முதலாவதாக மரணமானவரின் காலிலும், இரண்டாவதாக மரணமாவரின் பிடரியிலும், மூன்றுவதாக மரணமானவரின் தோள் பட்டையிலும் விஷப் பாம்பின் பற்கள் பதிந்திருந்தன.

எத்தனை பற்கள்? எல்லாம் ஒரே விதமாகவா இருந்தன—ஷகான் கேட்டார்.

ஆமாம் ஷகான்; டாக்டர்களின் அறிக்கையின்படி, விஷப் பற்கள் இரண்டு பதிந்த அடையாளம் காணப்பட்டதென்றும், அநேகமாக ஒரு பாம்புதான் இப்படிபழிவாங்கியிருக்கிறது. அல்லாவிடில் ஒரு வம்சம் இந்தத் தொழிலில்—மக்களைப் பழிவாங்குவதில் ஈடுபட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.

இறந்தவர்களின் விபரம் பற்றிக் கூறுவீர்களா இன்ஸ்பெக்டர்?

அதற்கென்ன...? உங்களின் தயவையே நாடிவந்திருக்கும் நான் உங்களுக்காக என்ன உதவிகளும் செய்யத் தயாராகவிருக்கின்றேன் ஷகான்.

புன்னகை யொன்றை உதிர்த்தவாறே, இன்ஸ்பெக்டரிடமிருந்து ஒரு'பைலை' வாங்கினர் சி. ஐ. டி. ஷகான் விஷப்பாம்பினல் கடிபட்டு மரணமான மூவரின் விபரங்கள்யாவும் அந்த 'பைலில்' இருந்தன. 'பைலை' வாங்கிய சி. ஐ. டி. ஷகான், எல்லா விபரங்களையும் நன்றாகப்படித்தார். பைலுக்குள் இருந்த விபரங்கள் யாவும் சி. ஐ. டி. ஷகானின் மனதில்— பசுமரத்தாணி போன்று பதிந்திருந்தன. விபரங்களைப் படித்துக்கொண்டே கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தார் ஷகான்.

மரணமான மூவருக்குமிடையே எந்த விதத்திலும் தொடர்பிருக்கவில்லை என்றே உங்களிடமுள்ள விபரங்கள் கூறுகின்றன பிரான்ஸிஸ். ஆனுல் இதில் எனக்கொரு சந்தேகம்...

என்ன சந்தேகம்? நீங்கள் தாராளமாக மனம்விட்டு பேசலாம் ஷகான்—என்றார் இன்ஸ்பெக்டர்.

விஷப்பாம்பின் விளையாட்டுக்கு—பழிக்குப்பழிவாங்கும் எண்ணத்துக்கு பலியாகியிருக்கும் மூவரும்; இரவு வேளையில் அதுவும் நடுநிசியில்தான் மரணமாகியிருக்கிறார்கள். இதைப் பார்க்கும் பொழுது...... என்று சொல்லி முடிவதற்குள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ் குறுக்கிட்டு, மற்றுமொரு 'பைலை' கொடுத்தார். அந்தப் பைலுக்குள் பிரபல சோதிடர் ஜெயராஷ்மா, பத்திரிகை யொன்றுக்கு எழுதிய கட்டுரை இருந்தது. சி. ஐ. டி. ஷகான் அந்தப் பைலை வாங்கிப் படித்தார். சி. ஐ. டி. ஷகானின் மனதில் அப்பொழுது என்ன உதித்ததோ தெரியவில்லை. அவரின் முகத்தில் மின்னல் வேகத்தில் ஒரு சிந்தனைக்குறி தோன்றி மறைந்தது. அது ஏன்? எப்படி? அதன்முடிவு? எல்லாம் சி. ஐ. டி. ஷகானுக்குத்தான் தெரியுமே தவிர இன்ஸ்பெக்டர் பிரான்சிஸுக்கு ஒன்றுமே விளங்காது அதைப் புரிந்துகொள்ளும் தன்மையில் கூட இன்ஸ்பெக்டர் அப்பொழுது இருக்கவில்லை!

சோதிடரை நான் காண வேண்டியிருக்கிறது. விஷப் பாம்பு பற்றிய தகவல்களை அறிவதற்கு அவருடைய சந்திப்பு எனக்கு நல்ல உதவியளிக்கும் என்ற நம்பிக்கை எனக்குத் தோன்றியுள்ளது. அதுசரி... சோதிடர் ஜெயராஷ்மாவின் விலாசத்தை எனக்குக் கொடுப்பீர்களா? என்றார் சி. ஐ. டி ஷகான்.

அதற்கென்ன...என்று கூறிக் கொண்டே, தனது ஷேட் பாக்கெட்டுக்குள்ளிருந்த நோட்புத் தகத்திலிருந்து கிழித்த தாளில் எதையோ எழுதிக் கொடுத்தார் இன்ஸ்பெக்டர் 'தாங்ஸ்' என்று சொல்லிக் கொண்டே, அதை வாங்கிக் கொண்டார் ஷகான் அந்தத் தாளில்; "சோதிடர் ஜெயராஷ்மா, நெத்ஸ் வீதி, கல்லடி உப்போடை" என்று குறிக்கப் பட்டிருந்தது,

பொலிஸ் இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ் விடைபெற்றுச்செல்வதற்காக அவர் இருந்த ஆசனத்தைவிட்டு எழும்பிய சமயம்...அதே நேரத்தில்...

(தொடரும்)

## துப்பறிய முடியுமா?

ஜமிந்தார் ஜகன் வீட்டு வேலைக்காரன் வேணு, உண்மையிலேயே குற்றவாளிதானு? காரணம் என்ன என்பதை சி. ஐ. டி. ஷகானே சொல்கிறார் கேட்டுப்பாருங்கள்.

"வேணுவின் ஷேட் பாக்கெட்டுக்குள் சினிமா டிக்கட்டின் அடிக்கட்டை யொன்று இருந்தது. ஆனுல் இதற்கு முன் நான் தியேட்டர் மனேஜருடன் டெலிபோனில் தொடர்பு கொண்டு அன்று நடைபெற்ற முதலாம், இரண்டாம் காட்சிகளின் போது விநியோகிக்கப்பட்ட டிக்கட்டுகள் இலக்கத்தைக் குறித்துக் கொண்டேன். வேணுவின் ஷேட்பாக்கட்டுக்குள்ளிருந்த டிக்கட்டில் இருந்த இலக்கம், அன்று வேணு எந்தப் படமும் பார்க்கவில்லை யென்பதை நிரூபித்துவிட்டது. மேலும், வேணு அன்றிரவு உண்மையில் செல்லவில்லை யென்பதும் நிருபனமாகிவிட்டது. வேணு ஏன் பொய் சொல்ல வேண்டும்? சதாரணமாக வழக்கில் அல்லது விசாரணையில்பொய்சொல்வதேஆபத்தானது! வேணுபொய்சொன்னுன்— திருடியவன் அவன் தான் என்பது தெளிவு ஆகையினுல் வேணுவைக் கைது செய்தேன்!"

தொண்ணூற்று ஆறு (96) பேர் விடையெழுதியிருந்த போதிலும் ஆறுபேர்தான் துப்பறிந்து, சரியானவிடை எழுதியிருக்கிறார்கள். இவர்களுக்கு எமது பாராட்டுதல்கள். சரியான விடையனுப்பியவர்களின் பெயர்கள் வருமாறு:

ஆர். வி. ஜி. ஞானம், வல்வெட்டித்துறை; க. சீவரத்தினம், கொடிகாமம்; ஆ. பொன்னுச்சாமி, தொண்டைமனுறு; ஆ. கிருஷ்ணமூர்த்தி, ஏழாலை மேற்கு; பெ. சிவகுருநாதன், காங்கேசன் துறை; செ. கலிங்கராஜன், வல்வெட்டித்துறை.

## மூளைக்கு வேலை

கடந்தவாரம் நாம் கேட்ட கேள்வி, உங்களுக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்பதை எமக்கு தினமும் வந்துகுவியும் தபாலட்டைகளிலிருந்து நன்கு காணக் கூடியதாகவிருக்கிறது. கடந்தவாரம் கேட்கப்பட்ட கேள்விகளைப்போன்று கேள்விகளைக் கேட்குமாறு பலர் எமக்கு எழுதியிருக்கின்றனர். உங்களைத் திருப்திப்படுத்துவது தானே எமது நோக்கம்.

நாம் இனி கடந்தவாரம் கேட்கப்பட்ட கேள்வியின் விடையைக் கவனிப்போம்: இதற்குரிய சரியான விடை: "B" என்ற ஆங்கில எழுத்தாகும். சரியான விடையைப் பின் வருபவர்கள் எழுதியிருக்கின்றனர். இவர்களுக்கும், மூளைக்கு வேலைப்பகுதியில் வாராவாரம் தொடர்ந்து பங்குபற்றுபவர்களுக்கும் எமது பாராட்டுதல்கள்.

கமலா, சுண்டிக்குளி பெண்கள் பாடசாலை, த. சங்கரராஜா இந்துக்கல்லூரி, எஸ். கமலமங்கை விருத்தா இந்து மகளிர் கல்லூரி, விஜயலட்சுமி கந்தசாமி, பொ. பாஸ்கரன், வை. தியாகராசா, கனகலட்சுமி ராஜரட்னம் யாழ்ப்பாணம்; க. ஞானலிங்கம், சரசாலை; ச. அற்புவிஜயகன், சாவகச்சேரி; த. இராசஞானம், பி. ரி. தவராசா, ந. செல்வநிதி, செ. விவேகானந்தன், யோசேப்பின் பொன்னுக்கோன், சாவகச்சேரி; கு தெய்வநாயகி, தி. சரவணபவன், தி. குமாரதாசிவம், சுன்னுகம்; எஸ். ராஜலிங்கம், ச. மார்க்கண்டேய சர்மா, ரி. ஜெயராஜா, மா. தியாகேஸ்வரன், அளவெட்டி; என். ராணி, சு. இராசையா, ஓமந்தை; ஆர். பி. செல்லத்துரை, பரந்தன்; எஸ். அழகக்கோன், இளவாலை; ச. நிமலா, கு. லூட்ஸ் பேணடேற், ஆனைக் கோட்டை; க. தக்ஷணேஸ், ம. க. ஸ்ரீதரன், கரணவாய் தெற்கு; க. செல்வரத்தினம், முள்ளானை; க. சிதம்பரநாதன், மாதகல்; நா. சண்முகசுந்தரம், மாதகல் மேற்கு; வ. முருகையா, வீமன் காமம்; எஸ். வி. சிங்கம், மாவையூர்; ஜே. உதயகுமார், கந்தையா நீலகண்டன், கருணைவாய், தெற்கு; செ. நவரத்தினம், செ. நகுலேஸ்வரி,சிறுப்பிட்டி வடக்கு; சி. மகேந்திரன், ஆ. கிருஷ்ணமூர்த்தி, ஏழாலை மேற்கு; பவானிதேவி மகாராசா, சரவணை மேற்கு; இ. சற்குருநாதன், வேலணை;யோகலெட்சுமி மாணிக்கம், கரம்பொன் மேற்கு; ரி. எம். இராமக்கிருஷ்ணன் ஊர்காவற்றுறை; எஸ். எஸ். ராணி, க. சீனியர், கைதடி; இராணி பவளகாந்தி ஆறுமுகம், ஆ. இந்திராணி சொர்ணகாந்தி, பருத்தித்துறை; வி. யோகேஸவரி, உரும்பராய்; சரோஜினி நாகலிங்கம், கட்டுடை; த. காங்கேசபிள்ளை, மண்டைதீவு; நா. சிவசுப்பிரமணியம், நவாலி; ந.குலசேகரம், அராலி; சி. ரூபர்ட்பஞறஸ், சங்கானை; பெ. சிவகுருநாதன், காங்கேசன் துறை; செ. செல்லத்துரை, கோண்டாவில்; யோ. ஞானப்பிரகாசம், திருநெல்வேலி; மு. சபாரத்தினம், காரைநகர்; அ. கனகசூரியர், ஊரெழுமேற்கு.

### இவ்வாரக்கேள்வி

எழுத்து சம்பந்தப்பட்ட கேள்விகளில் உங்களுக்கு மிகுந்த ஆர்வமிருப்பதால் இதோ ஓர் எழுத்து கேள்வி! ஆங்கிலத்தில் ஒன்றில்இருந்து நூறுவரை எழுத்தால்எழுதும்போது அதாவது One, Two, Three... என்றுஎழுதும்போது, ஓர் ஆங்கில எழுத்துஒரு இடத்திலும் உபயோகப்படுவதில்லை. ஆனுல் நூறுக்குமேல் எழுதபபடும் எண்ணில் அந்த எழுத்து இடம்பெறுகிறது. அப்படியென்றால் அந்தக் குறிப்பிட்ட ஆங்கில எழுத்து எது? என்ன கஷ்டமாகவிருக்கிறதா? கவலைப் படாதீர்கள்! மூளைக்கு சிறிது வேலையைக் கொடுங்கள். விரைவில் விடையைக் கண்டுபிடித்து விடுவீர்கள். உங்களால் முடிந்தால் சரியான விடையை தபாலட்டையில், எதிர்வரும் சனிக்கிழமைக்கு முன்னதாக, மாணவர் மலர் 'ஈழநாடு' த. பெ. எண். 49, யாழ்ப்பாணம்என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள். மீண்டும் அடுத்தவாரம் சந்திப்போம். — சாந்தா

### துப்பறியுங்கள்!

சாவகச்சேரி எங்கும் ஒரே பரபரப்பு! பிரபல வழககறிஞர் வைகுந்தநேசன் சுட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார்! சி. ஐ. டி. ஷகானின் டெலிபோன் அலறியது. "ட்ரிங்... ட்ரி...ங் ட்ரிங்..."

"ஹலோ... இன்ஸ்பெக்டர் வஹாப்பா... என்ன... சாவகச்சேரியிலா... இதோ... வண் செக்கன்ட்..."...'கிளிக்...'டெலிபோன் வைக்கப்படும் சத்தம் கேட்கிறது.

வழக்கறிஞர் வைகுந்தநேசன்,அவரது அறையிலுள்ளகட்டிலில் கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறார்! அவரின் மார்பிலிருந்துவழிந்தஇரத்தம் கழுத்து, உடல் முழுவதும் பரவிக்கிடந்தது. சி. ஐ. டி. ஷகான் விசாரணை செய்த பொழுது வைகுந்தநேசன் வீட்டில் தனிமையாக வசிப்பவரென்றும், வெளியூர் சென்றுவிட்டு நேற்றிரவு வீடு திரும்பினரென்றும், வீட்டு வேலைக்காரன் ராமனும், தனது வீட்டுக்குச் சென்றுவிட்டு இன்று காலைதான் இங்கு திரும்பினனென்றும் தெரிவிக்கப்பட்டது.

வைகுந்தநேசனுக்கும் எதிர்வீட்டில் தனிமையாக வசிக்கும் பங்கருவுக்கும் மனக்கசப்பு உண்டென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. கொலை செய்யப்பட்ட வைகுந்தநேசனை ஷகான் பார்வையிட்டார். அந்த அறைக்குள்ளிருந்த மேசைமீது சில காலியான 'திறிரோசஸ்' சிகரெட்டு பாக்கெட்டுகள் கிடந்தன. மேசைக்கருகில் வந்தசி. ஐ. டி. ஷகான், கீழே குனிந்து எதையோ எடுத்தார். கவனமாக அதைப் பார்வையிட்டார். நிமிடங்கள் சென்றன.

பங்கருவுடன் ஷகான் கதைத்துக் கொண்டிருந்தார். யாழ்ப்பாணத்திலுள்ள தனது நண்பரொருவரின் திருமணத்துக்குச் சென்றுவிட்டு இப்பொழுது தான் சாவகச்சேரி வந்ததாக பங்கரு சொன்னர். ஷகான் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனர்.

'ஸார்... சிகரெட்...' என்றார் பங்கரு.

'தாங்கியூ' என்று சொல்லுக்கொண்டே சிகரெட்டை வாங்கிக்கொண்டார் ஷகான்.

"பங்கரு... நீங்கள் வைகுந்தநேசன் வீட்டுக்குச் செல்லவில்லையா? அவரின் மரணத்துக்கு நீங்கள் உடந்தையில்லையா? மறைக்காதீர்கள்..." என்று சி. ஐ. டி. ஷகான் சொன்னதும்; பங்கரு புழுப்போல் துடித்தார்! "நான் அவருடன் கோபமே தவிர கொலைக்கு நான் உடைந்தையில்லை ஸார்!

(7-ம்பக்கம் பார்க்க)

## வானொலி நிகழ்ச்சிகள்

**செவ்வாய் 5-2-63**

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 திரை இசை, 6-15 பாங்கு, 6-30 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 இருபது கேள்விகள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 இசைச்சித்திரம், 9-45 எம். இராமையா—நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள் வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 செம்பை சி. ஆர். ஸ்ரீநிவாசபாகவதர்—பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்திய இசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப்பயிற்சி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 டி. எம். பாஸ்கரத் தொண்டமான்-பேச்சு, 7-45 சுலோசனா மகாதேவன்—பாட்டு, 9-15 நாட்டுப் பாடல்கள், 9-45 இசைமலர்.

---

## ஆசிரியர் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் 47-வது வருடாந்தக் கூட்டம் நேற்று முன்தினம் காலை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. ஏ. ஆர். இராசநாயகம் தலைமை வகித்தார்.

உத்தியோகத்தர் தெரிவின் போது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஐ. ஆர். அரியரத்தினம், உப தலைவர்கள்: திருவாளர்கள் எம். பேராயிரவர், கே. அருணசலம், ரி. விசுவநாதன், காரியதரிசி: திரு. ஆர். சிவனேசன், பொருளாளர்: திரு. என். எஸ் சாமுவேல்.

---

## ஒருசதமும் கூட்டித் தரமாட்டோம்

### நிதிமந்திரி அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

தாங்கள் செய்யும் மேலதிக வேலைக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தில் ஒரு சதம் அதிகரிக்குமாறு தபாற்கந்தோர் சேமிப்புப்பகுதி எழுதுவினையர்களின் கோரிக்கைக்கு இணங்க முடியாதென்று நிதியமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகல்லை தெரிவித்துள்ளார்.

சேமிப்புப் பணங்களுக்கு வட்டி கணக்குப்பார்த்து அதை மீண்டும் சரிபார்ப்பதற்கு ஒரு சேமிப்பிற்குத் தங்களுக்கு ஒன்றரைச் சத வீதம் கொடுக்கப்படுவதாகவும், அதை இரண்டரைச் சதமாக அதிகரிக்கும்படியும் எழுதுவினைஞர்கள் அரசாங்கத்தைக் கேட்டிருந்தார்கள்.

## சமஸ்கிருத பரீட்சை!

### விண்ணப்பப் பணம் அனுப்புவதில் கஷ்டம்

யாழ்ப்பாணம், திங்கள்

பம்பாய் பாரதீய வித்தியா பவன் நடாத்தும் சமஸ்கிருத பரீட்சைக்கு புத்தூர் கேந்திரத்திலிருந்து 118 பரீட்சார்த்திகள் தோற்றவிருக்கின்றனர். இம் மாணவர்களில் திருக்கேதீச்சர சிவானந்த குருகுல மாணவர்களும் உள்ளனர்.

பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்களுடன் அதற்குரிய விண்ணப்ப பணத்தை அனுப்ப முடியாத நிலை தோன்றியுள்ளது. இங்கிருந்து பணம் அனுப்புவதனை அரசாங்கம் தடை செய்துள்ளது. பரீட்சைக் காரியதரிசி மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டம்பற்றி நாணயக் கட்டுப்பாட்டதிகாரிக்குக் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. பலவருடங்களாக இலங்கையில் இப் பரீட்சை நடாத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாண்டு புதிதாகத் தோன்றியுள்ள இந்த நெருக்கடி நிலை பற்றி திருக்கேதீச்சரம் சிவானந்த குருகுலத் தலைவர் சேர். கந்தையா வைத்தியநாதன் வெகு விரைவில் அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கைப்பந்தாட்ட சங்கக் கூட்டம்

கரவெட்டி, திங்கள்

"விளையாட்டுப் போட்டிகள் நமது பாரம்பரியமான ஒற்றுமையைப் பலப்படுத்துகிறதுமல்லாமல் உடல் வளர்ச்சிக்கும் உதவி செய்கிறது. விளையாட்டுக்களில் பரஸ்பரம் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருக்கவேண்டும். விளையாட்டுக்களில் போட்டி, பூசல்கள் எற்படாமல் இருக்க விளையாட்டில் பங்கு பற்றுகிறவர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்."

இவ்வாறு வளர்மதி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கைப்பந்தாட்டச் சங்கக்கூட்டத்தில் ஆசிரியர் திரு. எம். செல்லத்தம்பி பேசுகையில் குறிப்பிட்டார்.

'வளர்மதி' கைப்பந்தாட்டச் சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. வ. கந்தப்பு, காரியதரிசி: திரு. க. சோமு, தனாதிகாரி. சி. வைரமுத்து, விளையாட்டுக் காப்டனாக ஆசிரியர் திரு. எம். செல்லத்தம்பி தெரிவு செய்யப்பட்டார்.

---

## மூன்றாவது தடவை வெற்றி

பண்டாரவளை, திங்கள்

தற்கொலை செய்து கொள்வதற்கு இரண்டு தடவைகள் முயற்சித்துத் தோல்வியடைந்த 48 வயதுள்ள ஆர். டி. பபிலிஸ் என்பவர் மூன்றாவது தடவையில் சித்திபெற்றார். ஆமாம் அவர் மூன்றாவது தடவை கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். இவருக்கு மனைவியும் 6 குழந்தைகளும் உண்டு.

## துப்பறிய முடியுமா?

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னை நம்புங்கள்! நான் பி. எஸ். சி. படித்தவன் ஸார்!" என்றார் பங்கரு.

ஒரு மணி கழிந்தது. சந்தேகத்தின் மீது, பங்கருவை பொலிஸார் கைது செய்தனர். கைது செய்யும்படி ஷகான் உத்தரவிட்டிருந்தார்! என்ன... நிரபராதியை ஷகான் கைது செய்துவிட்டார் என்று எண்ணுகிறீர்களா? எதற்கும் நீங்களே, துப்பறிவாளராக மாறி இந்தக் 'கேஸை' கண்டுபிடியுங்கள். முடிந்தால் விடையை துப்பறிந்தேன், "மாணவர் மலர்" 'ஈழநாடு', த. பெ: 49, யாழ்ப்பாணம். என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

—"சி. ஐ. டி."


ஓவியர் கண்ட யால வனம்



எங்கு சென்றாலும்

**நன்றாய்ச் செல்க**

**ஷெல்லிற் செல்க**

யால காவல் வனம் - ஏராளமான வன விலங்குகள், கண் கவர் காட்சி நிறைந்த நில வெளிகள் ஆகியவற்றைக் கொண்டு, அதிபிரபல்யமான இயற்கை வனமாக விளங்குகிறது. அங்கு, காரில் வெகு சுலபமாகச் செல்லலாம். கொழும்பிலிருந்து சுமார் 200 மைல் தூரத்திலுள்ள இந்த வனத்தை, ஒரு நடுத்தரக் காரில், 7 கலனுக்கும் கொஞ்சம் கூடுதலானளவு பெட்ரோல் பிரயபி; 7 மணி நேரத்திற் சென்றடையலாம்.

யால காவல் வனத்திற்கு உல்லாசப் பிரயாணம் செய்வது குதூகலம் மிகுந்த ஓர் அனுபவம். யானைகள், மான்கள், சிறுத்தைகள், கரடிகள் ஆதியனவும் மற்றும், ஏராளமான வன விலங்குகளும், இயற்கையான சூழலிற் தம இஷ்டம் போலத் திரிந்து, துள்ளாட்டமாடி உங்களை வசீகரிக்கும்; லாவண்யமான, செழித்த உஷ்ண மண்டல வனம் உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளும்.

அடுத்த வார இறுதியில் நீங்கள் யால வனத்துக்குப் போகத் திட்டமிட்டாலென்ன? ஷெல்லில் நீங்கள் வெகு நன்றாய்ச் செல்லலாம். வழி நெடுகிலும் உள்ள ஷெல் பெட்ரோல் நிலைய விற்பனையாளர்கள், உங்கள் பிரயாணம் மகிழ்ச்சிகரமானதாக அமைய உதவி செய்வார்கள். ஐ. சீ. ஏ. கலந்த சுப்பர் ஷெல், ஐ. சி. ஏ. கலந்த் ஷெல், ஷெல் X - 100 மோட்டார் எண்ணெய் ரகங்கள் (மல்டி கிரேட், கிரமமான ரகங்கள்) ஆகிய உச்ச தராதரமுள்ள பொருட்களை வழங்க அவர்கள் வசதியும் வல்லமையுமுள்ளவர்களாயிருக்கிறார்கள். சிறப்பான சேவையைத் துரிதமாக அளிக்க அவர்களின் ஊழியர்கள் பயின்றிருக்கிறார்கள்.

மறவாதீர்கள்! ஷெல் பெட்ரோல் ரகங்களிலேதான் உங்கள் கார் உச்ச சக்தியை நிச்சயமாக வழங்கச் செய்யக் கூடிய ஆச்சரியகரமான ஐ. சீ. ஏ. கூட்டுப் பொருள் உண்டு. நீங்கள் எங்கு சென்றாலும்.......... நன்றாய்ச் செல்க..........ஷெல்லிற் செல்க.

ஷெல்லை நீங்கள் நிச்சயம் நம்பலாம். SHELL

## பாகிஸ்தான பெயர் மாற்றம்

ராவல்பிண்டி, பெப். 4
பாகிஸ்தானின் பெயரை "பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு"என மாற்றுவதென்று அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இதற்கேற்ப அரசியல் சாஸனம் திருத்தப்படும்.

## நகைகள் பிடிபட்டன

வேலூர், பெப். 4
வேலூரில் ஒரு வீட்டை பொலிசார் திடீரெனச் சோதனையிட்டு 21 கிராம் எடையில் செய்யப்பட்ட நகைகளைக் கைப்பற்றினர்.

## யாழ்ப்பாணபுகையிரதநிலையம் ஆகஸ்டில் திறப்புவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்
யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டுவரும் புதிய புகையிரத நிலயம் ஆகஸ்ட் மாதத்துக்குள் பூர்த்தியடைந்துவிடுமென்றும் புதிய புகையிரதநிலயத் திறப்புவிழா ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறுமென்றும் தெரியவருகிறது. சிறந்த வசதிகளைக்கொண்டதாக விளங்கவிருக்கும் இப் புதிய நிலையம் அதிக செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. கட்டிட அமைப்பு வேலைகள் முக்கால்வாசி முடித்துவிட்டது.

பெருந்தொகையான செலவில் நவீன வசதிகளுடன் அனுராதபுரத்தில் அமைக்கப்பட்ட புதிய புகையிரத நிலயத்தை பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சென்ற ஞாயிற்றுக்கிழமை சம்பிரதாய முறைப்படி திறந்துவைத்தார். பிரயாணிகள் தங்குவதற்கு ஐந்து விசாலமான மண்டபங்களும் குடும்பத்துடன் வரும் யாத்திரிகர்கள் தங்கி ஓய்வு பெறுவதற்கென ஒன்பது அறைகளும் தனிப்பட்டவர்கள் தங்கி ஓய்வுபெறுவதற்கென நான்கு அறைகளும் தளபாட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. இதர புகையிரதநிலயங்களில் உள்ளதுபோல் இந்தப் புதிய நிலயத்தில் ஒரு மேடையிலிருந்து (பிளாட்பாரம்) மற்ற மேடைக்கு படிகளில் ஏறி இறங்கவேண்டிய அவசியமில்லை. தென்னிந்தியாவில் திருச்சி ரயில் நிலயத்தி லுள்ளதுபோல் நிலத்தில் உப பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## ஆசிய-ஆபிரிக்க மகாநாடு

மோயிஸ் பெப். 4
மூன்றுவது ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமை மகாநாடு இன்று தங்கனிக்காவில் மோயிஸ் நகரில் ஆரம்பமாகிறது. எட்டு நாடகள் நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டில் காலனி ஆதிக்கம், ஐரோப்பிய பொதுச் சந்தை, சீன- இந்திய எல்லைத் தகராறு ஆகியவை பற்றி மகாநாட்டில் ஆலோசனைநடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தமகாநாட்டில் 66 நாடுகளிலிருந்து 300 பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர்.

## கொழும்பு நகரில் கோர தீ விபத்து; இருகடைகள் நாசம்; ஒருமனிதன் கருகி மரணம்

கொழும்பு, திங்கள்
கொழும்பு நகரில் ேோர்க்வீதியிலுள்ள ஒரு சீன ஹோட்டலில் நேற்றிரவு பதினொரு மணியளவில் ஏற்பட்ட தீவிபத்து ஹோட்டல் முழுவதையும் சாம்பராக்கியதுடன் அதை அடுத்துள்ள "சாரதா ஸ்டோர்ஸ்" என்ற புடவைக் கடையையும் நாசமாக்கிவிட்டது. தீயணைக்கும்படையினர் ஐந்து தீயணைப்பு என்ஜின்களின் உதவியுடன் நீண்டநேரம் போராடி இன்று அதிகாலையில் தீயை முற்றாகஅணைத்தனர். புடவைக்கடைக்குள் துணிவகைகளும் தளவாடங்களும் முற்றாக எரிந்துசாம்பராகிப்போயின. அவைகளுக்குள்ளிருந்து இக்கடையில் வேலைபார்க்கும் அருணசலம்பிள்ளை என்ற இளைஞனின் சடலம் எரிந்து கருகிய நிலயில் எடுக்கப்பட்டது. தீவிபத்து ஏற்பட்டசமயத்தில் அவர் ஆழ்ந்த நித்திரையிலிருந்தார். விபத்து சம்பந்தமாக ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சிறிசேனஎன்பவரை பொலிசார் கைது செய்தனர். இச்சம்பவத்தை ஆயிரம் பேருக்கு மேலானோர் கண்ணுற்றனர்.

விரைவில் எதிர்பாருங்கள்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்!
சிவாஜி கணேசன் - பத்மினி
மற்றும் பலர் நடிக்கும்
புனர்ஜென்மம்
திரைக்கதை–வசனம் ஸ்ரீதர் டைரக்ஷன் ஆர்.எஸ்.மணி இசை டி.சலபதிர

இப்பொழுது நடைபெறுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜயா (அம்பாறை) விஜயா (மட்டக்களப்பு)
எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
மற்றும் பலர் நடித்த
ராணி சம்யுக்தா
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன் டைரக்ஷன் டி. யோகானந்த்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
நாகநந்தினி

மனோகரா (யாழ்ப்பாணம்)
எம். என். கண்ணப்பா, மாதுரிதேவி, வி. என் ஜானகி, நம்பியார், எஸ். பாலச்சந்தர்
மற்றும் பலர் நடித்த
தேவகி

வாருங்கள் ! வாருங்கள் !!



வைர மாளிகை
மங்களகரமான
திறப்புவிழா வைபவம்

6-2-63 புதன்கிழமை காலை 7 மணிக்கு
யாழ்ப்பாணம் கன்னாதிட்டி 79-ம் நம்பர்



தற்காலபெண்மணிகளுக்கு ஏற்ற விதவிதமான
நவநாகரீக நகைகளுக்கு உகந்த இடம்



வைரமாளிகையே

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5ந்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.